# JUDICIAL RECRUITMENT CELL, HIGH COURT, MADRAS
# COMMON INSTRUCTIONS TO THE CANDIDATES APPLYING FOR VARIOUS POSTS IN THE SUBORDINATE JUDICIAL SERVICE IN THE STATE OF TAMIL NADU
# நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு, மெட்ராஸ் உயர்நீதிமன்றம்
# தமிழ்நாடு சார்நிலை நீதித்துறை பணியில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான அறிவுரைகள்
## (Notification Nos. 75 to 171/2024, dated 28.04.2024)

(The Notifications and Common Instructions to the candidates are made available to the candidates both in English and Tamil. In case of any inconsistency between English and Tamil versions, the English version will prevail over the Tamil version.)
(விண்ணப்பதாரர்களுக்கான அறிவிப்புகள் மற்றும் பொதுவான அறிவுரைகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், தமிழ் பதிப்பை விட ஆங்கில பதிப்பே மேலோங்கும்)

## 1. ELIGIBLITY(தகுதிகள்):

(a) The conduct, character and antecedents of the applicant must be good and suitable in all respects for appointment to the service. The candidates shortlisted for Viva-voce shall produce a certificate of character and conduct from two responsible persons not related to him, in the format prescribed in **Annexure-A.** The persons certifying shall be residing/working in the locality where the candidate resides/works and are well acquainted with the applicant in his/her personal life.

**Note**: – The persons certifying need not be a Gazetted Officer or a Government Servant or a Judicial Officer.

விண்ணப்பதாரரை பணியமர்த்த நற்பண்பு, நன்னடத்தை மற்றும் முன் வரலாறும், எல்லா வகையிலும் அவரை தகுதி படுத்துவனவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் வாய்மொழித் தேர்வுக்கு தகுதி பெறும்பட்சத்தில் இணைப்பு (A)-வில் வழங்கப்பட்டுள்ள படிவததில் நன்னடத்தைச் சான்றிதழை தனக்கு உறவுமுறையலலாத இரண்டு பொறுப்புமிக்க நபர்களிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றளிக்கும் நபர்களின் வசிப்பிடம்/பணிபுரியும் இடமானது விண்ணப்பதாரரின் வசிப்பிடத்தின்/பணிபுரியுமிடத்தின் அருகில் இருத்தல் வேண்டும். மேலும், விண்ணப்பதாரரின் தனிப்பட்ட வாழ்க்கை முறையை குறித்து நன்கு அறிந்தவர்களாக அந்த நபர்கள் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** சான்றளிக்கும் நபர் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலராகவோ அல்லது அரசு பணியாளராகவோ அல்லது நீதித்துறை அதிகாரியாகவோ இருத்தல் அவசியமில்லை.

(b) The applicant must be a person of sound health and clean habits. No person will be appointed as a member of the Service unless he / she is in good mental and physical health except a person who is claiming reservation under 'THE RIGHTS OF PERSONS WITH DISABILITIES ACT, 2016'.
விண்ணப்பதாரர் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்ல பழக்கவழக்கங்கள் கொண்டிருத்தல் வேண்டும். "மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் 2016"-இன் கீழ் ஒதுக்கீடு கோரும் நபரைத் தவிர, மற்ற விண்ணப்பதாரர்கள் திடமான உடல் நிலை மற்றும் மனநிலை பெற்றிருப்பவராகவும், உடல ரீதியான குறைபாடு ஏதுமில்லாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(c) <u>A candidate for appointment shall be</u>,
- (a) a citizen of India or
- (b) a subject of Nepal or
- (c) a subject of Bhutan or
- (d) a person of Indian origin, who has migrated from Pakistan, Myanmar, Sri Lanka or East African Countries of Kenya, Uganda, the United Republic of Tanzania, Zambia, Malawi, Zaire and Ethiopia with the intention of permanently settling in India:

Provided that a candidate specified in clauses (b), (c) and (d) shall be a person in whose favour a certificate of eligibility has been given by the Government. (Certificate should be uploaded)

**<u>(Section 20(7) of the Tamil Nadu Government Servants(Conditions of Service) Act,2016)</u>**

<u>நியமனத்திற்கான விண்ணப்பதாரர்கள்:</u>
- (அ) இந்திய குடிமகனாக அல்லது
- (ஆ) நேபாளத்தின் குடிமகனாக அல்லது
- (இ) பூடானின் குடிமகனாக அல்லது
- (ஈ) இந்தியாவில் நிரந்தரமாக குடியேற வேண்டும் என்கின்ற நோககத்துடன் பாகிஸ்தான், பர்மா, இலங்கை மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க நாடான கெனயா, உகாண்டா, ஐக்கிய குடியரசாகிய தான்சானியா, சாம்பியா, மாளவி, ஸெய்ரா மற்றும் எத்தியோப்பியாவிலிருந்து குடிபெயரந்த இந்திய வம்சாவழியினராக இருத்தல் வேண்டும்.

மேலும், விண்ணப்பதாரர் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்று குறிப்பிடப்பட்டுள்ள உட்பிரிவுகளில் ஒருவராக இருப்பாராயின், அவருக்கு 'தகுதிச் சான்றிதழை' அரசு வழங்கியிருக்க வேண்டும் (அச்சான்றிதழ பதிவேற்றம் செய்யப் படவேண்டும்) [தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இன் பிரிவு 20(7)]

(d) The applicant shall obtain and submit Experience Certificate, if any, in the format prescribed in **Annexure-C** from the employer under whom/office in which he is working / worked and gained experience.
விண்ணப்பதாரர்கள் முன் அனுபவம் ஏதேனும் பெற்றிருப்பின், அவர்கள் பணிபுரியும் அலுவலகத்திலுள்ள அலுவலரிடமிருந்து /பணிபுரிந்த அலுவலகத்திலிருந்து பெற்ற முன் அனுபவ சான்றிதழை இணைப்பு-Cயில் குறிப்பிட்டவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

**2. <u>DISQUALIFICATION FOR APPOINTMENT(பணிநியமனத்திற்கான தகுதியின்மை):</u>**

No person shall be eligible for appointment

**எந்தவொரு நபரும், கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்கவில்லையெனில் அவர் பணியில் நியமிக்க தகுதியற்றவராவர்**

*(a)* unless he / she satisfies-

(i) that his / her character and antecedents are such as to qualify him / her for such service;

(ii) that such a person does not have more than one spouse living or if such a person is a woman, she is not married to any person who has a wife living;(or)

**அ) பணி நியமனம் செய்யப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும் முன்வரலாறும் அவரை தகுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.**

**ஆ) ஆண் விண்ணப்பதாரர், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் பெண்ணாக இருப்பின், ஏற்கனவே மனைவியுடன் வாழும் ஒருவரைத் திருமணம் செய்தவராக இருத்தல் கூடாது.(அல்லது)**

*(b)* If he/she was dismissed or removed on stigmatic termination of service by Central Government or High Court or any State Government or Statutory or Local authority or from any employment (or)

**மத்திய அரசு பணியிலோ அல்லது உயர் நீதிமன்ற பணியிலோ அல்லது மாநில அரசு பணியிலோ அல்லது சட்டரீதியான உள்ளூர் அதிகாரப் பணியிலோ அல்லது வேறு எந்த வகையான வேலை வாய்ப்புகளிலிருந்தும் பணியை களங்கப்படுத்தியதால் பணிவிலக்கம் அல்லது பணி நீக்கப்பட்டவர்கள் (அல்லது)**

*(c)* If a candidate, after being selected in any Service, has been discharged/removed from such service or convicted/acquitted/discharged of any offence or if a candidate who is or has been temporarily or permanently debarred or disqualified by the Judicial Recruitment Cell, High Court, Madras or the Union Public Service Commission or any State Public Service Commission or any other Recruitment Agency, Board or Commission, from appearing for examinations/interview or selections conducted by it, which in the opinion of the Judicial Recruitment Cell, High Court, Madras, is not suitable for appointment(or)

**ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தாலோ/நீக்கப்பட்டிருந்தாலோ அல்லது ஏதேனும் குற்றத்திற்கு தண்டனை பெற்றிருந்தாலோ அல்லது தண்டனையிலிருந்து விடுவிப்பு செய்யப்பட்டிருந்தாலோ, உயர் நீதிமன்றத்தாலோ அல்லது மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையத்தாலோ அல்லது வேறேதேனும் மாநில அரசுப்பணியாளர் தேர்வாணையத்தாலோ அல்லது வேறேதேனும் பணியாளர் ஆட்சேர்ப்பு முகமை, அல்லது வாரியம் அல்லது ஆணையத்தால் நடத்தப்படும் தேர்வு/நேர்காணல் மற்றும் தெரிவு செய்தல் ஆகியவற்றிலிருந்து தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ விலக்கி வைக்கப்பட்டுள்ள அல்லது தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர் மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவை பொறுத்தவரை பணிநியமனம் செய்ய தகுதியற்றவர் (அல்லது)**

*(d)* If any disciplinary proceedings initiated or penalty or punishment has been imposed or contemplated by any Disciplinary Authority or Court, which in the opinion of the Judicial Recruitment Cell, High Court, Madras renders him/her unsuitable for

appointment(or)
ஏதேனும் ஒழுங்குமுறை அதிகார குழுவாலோ அல்லது நீதிமன்றத்தாலோ, ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தொடரப்பட்டிருந்தால் அல்லது நிலுவையிலிருந்தால் அல்லது அபராதம் அல்லது தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால், விண்ணப்பதாரர் பணியமர்த்தப்பட தகுதியற்றவர் என மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு கருதும் (அல்லது)

*(e)* **If he/she influences or attempts to influence, or obtains or attempts to obtain, any favour in any form at any stage of selection process (or) through any person of influence or officers of Government / High Court (or)**
விண்ணப்பதாரர்கள் தேர்வின் எந்நிலையிலும், எம்முறையிலாவது பாரபட்சமான சலுகை எதனையும் பெறுதல் அல்லது பெற முயற்சி செய்தல் அல்லது செல்வாக்கைப் பயன்படுத்த முயற்சி செய்தல் அல்லது நேரடியாக செல்வாக்குள்ள நபர்கள்/ அல்லது அரசு அலுவலக/ உயர்நீதிமன்ற அதிகாரிகள் மூலம் நியமனம் பெற முயற்சித்தால (அல்லது)

*(f)* If impersonates by or for the candidate (or)
விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரருக்காக ஆள்மாறாட்டம் செய்தல் (அல்லது)

*(g)* If makes or submits any forged document in support of his/her candidature (or)
தங்களுடைய விண்ணப்பத்திற்கு ஆதரவாக ஏதேனும் போலி ஆவணங்களை உருவாக்குதல் அல்லது சமர்ப்பித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டால் (அல்லது)

*(h)* If he/she conceals any material information or provides any false information at any stage of selection process (or)
விண்ணப்பதாரர்கள் தேர்வின் எந்நிலையிலும் ஏதேனும் குறிப்பிட்ட தகவல்களை மறைத்தால் அல்லது தவறான விவரங்களை வழங்கினால் (அல்லது)

*(i)* If he/she uses or attempts to use, improper or illegal means, either for the purpose of being permitted to appear in examination or at any stage of examination, in examination room/hall (or)
தேர்வு எழுதும் அறை/கூடத்தில் தேர்வின் எந்நிலையிலும், தேர்வு எழுதவோ அல்லது தேர்வெழுத அனுமதிக்கப்படும் பொருட்டோ, முறையற்ற அல்லது சட்ட விரோதமான வழிமுறைகளை கையாண்டாரெனில் அல்லது கையாள முயன்றாரெனில் (அல்லது)

*(j)* If he/she, during examination, harasses or threatens or uses un-parliamentary words or causes physical injury to or misbehaves with, any Officer or employee engaged there or any candidate(or)
விண்ணப்பதாரர்கள், தேர்வின்பொழுது அங்கு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரி அல்லது பணியாளர் எவரையும் தொந்தரவு செய்தாலோ அல்லது மிரட்டுதல் அல்லது அவமரியாதையாக பேசினாலோ அல்லது உடல் ரீதியாக தீங்கு விளைவித்தாலோ அல்லது சக தேர்வர்களுக்கு இடையூறு செய்தாலோ அல்லது நெறிதவறி நடந்தாலோ (அல்லது)

*(k)* If he/she, disobeys any directions relating to examination including oral directions by the invigilator or observer or any other officer or employee engaged for conducting examination.

விண்ணப்பதாரர்கள் தேர்வு நடத்துதலில் ஈடுபட்டிருக்கும் கண்காணிப்பாளரால் அல்லது மேற்பார்வையாளரால் அல்லது வேறேதேனும் அலுவலரால் அல்லது பணியாளரால் அளிக்கப்படும் வாய்மொழி அறிவுரைகள் உட்பட தேர்வு தொடர்புடைய அறிவுரைகள் எதற்கும் கீழ்படியாதிருந்தால்

## 3. <u>RESERVATION IN APPOINTMENT(நியமன இடஒதுக்கீடு):</u>

(a) For all the posts, the rule of Reservation followed in the State of Tamil Nadu will be applicable.
**தமிழ்நாட்டில் தற்போது பயன்பாட்டில் உள்ள இடஒதுக்கீடு முறை அனைத்து பதவிகளுக்கும் பொருந்தும்.**

**(b)** The Persons belonging to the State of Tamil Nadu and belonging to one of the communities viz., Scheduled Caste or Scheduled Caste (Arunthathiars) or Scheduled Tribe or Most Backward Classes & Denotified Communities or Backward Classes and Backward Classes (Muslims), as the case may be, will alone be treated as belonging to the respective communities. The persons belonging to other States / Union Territories (i.e. except the State of Tamil Nadu) will be treated only as 'Unreserved Category', even though they may belong to one of the reserved communities in their respective States or Union Territories. Therefore, they cannot seek either age relaxation or reservation in appointment or fee concession, under any circumstances. They are required to fill up their category as"Unreserved Category (UR)" in the application form and can compete only under "Unreserved Category (UR)", by paying requisite fee. **Applications of other State/Union Territory candidates i.e. except the State of Tamil Nadu, who have applied by citing their communal status in their respective States /Union Territories and without paying prescribed fee and who are age barred will be summarily rejected and no correspondence in this regard will be entertained. <u>(Scheduled Caste- Arunthathiyar means the castes: Arunthathiyar, Chakkiliyan, Madari, Madiga, Pagadai, Thoti and AdiAndhra)</u>**
தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்கள்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிறபடுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்கள்) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வகுப்பை சேர்ந்தவர்கள் மட்டுமே அந்தந்த வகுப்பினர்களாக கருதப்படுவார்கள். மற்ற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை (அதாவது தமிழ்நாட்டினைத் தவிர) சேர்ந்தவர்கள், அவர்களுடைய மாநிலங்களில் அல்லது யூனியன் பிரதேசங்களில் இட ஒதுக்கீடு கோர தகுதியான வகுப்பை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் 'மற்றவர்கள்' (Unreserved Category – UR) என்றே கருதப்படுவர். எனவே அவர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும் வயது வரம்பில் தளர்வு அல்லது நியமனத்தில் முன்னுரிமை அல்லது கட்டணத்தில் தளர்வு என எச்சலுகைகளையும் கோர இயலாது. அவர்கள் விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்யும்போது 'மற்றவர்கள்' (Unreserved Category – UR) என்று தேர்வு செய்து தேவையான கட்டணத்தை செலுத்தி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். **மற்ற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் (தமிழ்நாட்டைத் தவிர) அவரவர்கள் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் அவர்களுடைய வகுப்பினை குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ள தேர்வுக் கட்டணத்தை செலுத்தாதிருந்தாலோ அல்லது**

**வயது வரம்பு கடந்தவர்களாக இருந்தாலோ அவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இது சம்மந்தமாக எந்த ஒரு கடிதப்போக்குவரத்தும் எந்தச் சூழ்நிலையிலும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.** **(ஆதிதிராவிடர்-அருந்ததியர் என்பது அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மாதிகா, பகடை, தோட்டி, ஆதி ஆந்திரா ஆகிய இனத்தைக் குறிக்கும்.)**

(c) The term **'Destitute Widow'** used in the Notification shall mean a widow whose total monthly income from all sources (including any family pension or other receipts and income from private practice in case of professionals) shall not be more than Rs.4,000/- (Rupees Four Thousand Only).

A "Destitute widow" shall include a candidate born outside the State of Tamil Nadu and became a widow after her marriage to a person belonging to the State of Tamil Nadu and residing permanently in the State of Tamil Nadu and shall also include a candidate born in the State of Tamil Nadu and became a widow after her marriage to a person belonging to any other State and settled permanently in the State of Tamil Nadu, but shall not include a candidate belonging to other State not covered under the above said categories.

Every candidate claiming to be a 'Destitute widow' shall upload a certificate in the Form specified in **Annexure-D**, from the Revenue Divisional Officer or the Assistant Collector or the Sub-Collector concerned, on or before the date of Notification.

இந்த அறிவிக்கையில் குறிப்பிடப்படும் "ஆதரவற்ற விதவை" என்பது ஒருவர் அனைத்து வழிகளிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4000/-க்கு குறைவாக பெறுகின்ற ஒரு விதவையைக் குறிக்கின்றதாகும். இவ்வருமானம் குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழில் வல்லுநர்கள் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

வேறு மாநிலத்தில் பிறந்து தமிழகத்தை பூர்வீகமாக கொண்டவரை திருமணம் முடித்து பின் விதவையானவர் மற்றும் தமிழகத்தில் நிரந்தரமாக குடியிருப்பவர், தமிழகத்தை நிரந்தர பூர்வீகமாக கொண்டு வேற்று மாநிலத்தவரை மணம் செய்து விதவையாகி பின் தமிழகத்தில் நிரந்தரமாக குடியிருப்பவர், போன்ற வகைகளைச் சார்ந்தவர்களும "ஆதரவற்ற விதவை" என்ற வகைக்குள் உள்ளடக்கம். மேற்கூறிய பிரிவினரைச் சாராத மற்ற மாநிலத்தைச் சார்ந்த ஒரு நபர் "ஆதரவற்ற விதவை" என்ற வகையின் கீழ் உள்ளடங்கமாட்டார்.

ஆதரவற்ற விதவைக்கான சலுகை கோரும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இணைப்பு "D"யில் குறிப்பிட்டுள்ளவாறு உரிய வருவாய் கோட்ட அலுவலர்/ சம்மந்தப்பட்ட உதவி ஆட்சியர்/சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அறிவிக்கை தேதிக்கு முன்போ அல்லது அறிவிக்கை தேதியன்றோ பெறப்பட்ட சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(d) "Person with Benchmark Disability" means a person with not less than forty percent of a specified disability where specified disability has not been defined in measurable terms and includes a person with disability where specified disability has been defined in measurable terms, as certified by the certifying authority designated by the Government under sub-section (1) of Section 57 of the Rights of Persons with Disabilities Act, 2016 (Central Act 49 of 2016). On selection, the candidate claiming reservation under the Differently Abled Category, should submit a Certificate from the Medical Officer of a Government Hospital, specifying the nature of physical disability and further certifying that the physical disability is not one which could render the applicant incapable of

efficiently discharging his/her duties. Persons with blindness and low vision are not eligible to apply.
நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரம் கொண்ட மாற்றுததிறனாளி என்பவர் குறிப்பிட்ட இயலாமையின் அளவு அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்படாமல் இருந்தால், குறிப்பிட்ட இயலாமையின் அளவு 40% அளவிற்கு குறைவில்லாத மாற்றுதிறனாளியாகவோ மற்றும் குறிப்பிட்ட இயலாமை அளவிடக்கூடிய வகையில் வரையறுக்கப்பட்டிருந்தால், அவ்வகை இயலாமை கொண்ட மாற்றுத்திறனாளியாகவோ, மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016, பிரிவு 57ல் உட்பிரிவு(1)ன்படி, (மத்திய சட்டம் 49/2016) அரசால் நியமிக்கப்பட்டுள்ள சான்றளிக்கும் அலுவலரால் சான்றளிக்கப்பட்ட நபர். மாற்றுத்திறனாளி என்ற வகையின் கீழ் இடஒதுக்கீடுகோரும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளி அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரியிடமிருந்து அவரது உடல் ஊனத்தின் தன்மை குறித்த சான்றிதழை பெற்று சமர்பிக்க வேண்டும். அச்சான்றிதழில் தங்களின் பணியை திறம்பட ஆற்றுவதற்கு அவர்களது ஊனம் தடையாக இல்லை என்று மேற்கூரிய மருத்துவர் குறிப்பிட வேண்டும். பார்வை அற்றவர்கள் மற்றும் பார்வை திறன குறைபாடு உடையவர்கள் இப்பணிக்கு விண்ணப்பிக்க இயலாது.

(e) Persons studied in Tamil Medium(PSTM) means a person who has studied in Tamil Medium from Elementary education to prescribed educational qualification.
ஆரம்ப கல்வி முதல் அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்டக் கல்வித் தகுதிவரை தமிழ்வழியில் பயின்றவரை குறிக்கும்.

(f) Persons claiming special reservation under '**Persons Studied in Tamil Medium' (PSTM)** should produce a certificate in the Form specified in **Annexure–E,** from the School/Institution, where he/she studied. <u>**However, for the posts, falling under Class–IV of the Tamil Nadu Basic Service Rules, for which the required educational qualification is 'must be able to read and write Tamil', special reservation under PSTM will not apply.**</u>
தமிழ்வழியில் படித்த நபர்கள் என்ற வகையின் கீழ் ஒதுக்கீடு கோரும் நபர்கள் அவர்கள் படித்த கல்வி நிலையத்திடமிருந்து இணைப்பு படிவம் - Eயில் குறிப்பிட்டுள்ளபடி அதற்குரிய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், தமிழ்நாடு அடிப்படை பணி விதி வகுப்பு - IV ன் கீழ் வரும் பணிகளின் கல்வித் தகுதி தமிழ் மொழியில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும். ஆகையால், தமிழ் வழியில் படித்த நபர்கள் என்ற சிறப்பு ஒதுக்கீடு பொருந்தாது.

(g) <u>'Ex-servicemen'means</u>-

<u>'முன்னாள் ராணுவத்தினர்' என்பவர</u>

(i) any person, who had served in any rank (whether as combatant or not) in the Armed Forces of the Union and has been released therefrom on or before the 30th June 1968 other than by way of dismissal or discharge on account of misconduct or inefficiency;or

ஒன்றியத்தின் ஆயுதப் படைகளில் (போரிடுபவராகவோ இல்லாமலோ) எந்தப் படிநிலையிலும் பணியாற்றியிருந்து, தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக பணிநீக்கம் அல்லது பணிவிடுப்பு முலமாக அல்லாமல் பிறவாறாக 1968, ஜூன் 30 ஆம் தேதியன்றோ அதற்கு முன்போ அதிலிருந்து விடுவிக்கப் பெற்றிருக்கும் நபர் எவரும் என்று பொருள்படும்; அல்லது

(ii) any person, who had served in any rank (whether as combatant or not) in the Armed Forces of the Union for a continuous period of not less than six months after attestation and released therefrom between 1st July 1968 and 30th June 1979 (both days inclusive) otherwise than by way of dismissal or discharge on account of misconduct or inefficiency;or

உறுதிச் சான்றுக்குப் பின்பு ஆறு மாதங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான காலஅளவுக்கு ஒன்றியத்து ஆயுதப்படைகளில் (போரிடுபவராகவோ இல்லாமலோ) எந்த ஒரு படிநிலையிலும் பணியாற்றியிருந்து, தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக பணிநீக்கம் அல்லது பணிவிடுப்பு மூலமாக அல்லாமல் பிறவாறாக, 1968, ஜூலை 1 ஆம் தேதிக்கும் 1979, ஜூன் 30 ஆம் தேதிக்கும் இடையே (இரண்டு நாட்களும் உள்ளடங்கலாக) அதிலிருந்து விடுவிக்கப் பெற்றிருக்கும் நபர் எவரும் என்று பொருள்படும்; அல்லது

(iii) any person, who had served in any rank (whether as combatant or not) in the Armed Forces of the Union for a continuous period of not less than six months after attestation, if released between 1st July 1979 and 30th June 1987 (both days inclusive) on the following grounds:-

(a) for reasons other than at his own request or by way of dismissal or discharge on account of misconduct or inefficiency;or

(b) at his own request after serving for a period of not less than five years;or

உறுதிச் சான்றுக்குப் பின்பு, ஆறு மாதங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான காலஅளவு ஒன்றுக்கு ஒன்றியத்து ஆயுதப்படைகளில் (போரிடுபவராகவோ இல்லாமலோ) எந்த ஒரு படிநிலையிலும் பணியாற்றியிருந்து,

(a) தம் சொந்த வேண்டுகோளிலோ அல்லது தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக பணிநீக்கம் அல்லது பணிவிடுப்பு மூலமாகவோ அல்லாத பிற காரணத்திற்காக; அல்லது

(b) ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவு ஒன்றுக்கு பணியாற்றிய பின்பு தம் சொந்த வேண்டுகோளின் பேரில;

1979, ஜூலை 1 ஆம் தேதிக்கும் 1987, ஜூன் 30 ஆம தேதிக்கும் (இரண்டு நாட்களும் உள்ளடங்கலாக) இடையே விடுவிக்கப்பட்டிருப்பாராயின் அந்த நபர் என்று பொருள்படும் ; அல்லது

(iv) any person, who had served in any rank (whether as combatant or not) in the Armed Forces of the Union, and had retired or had been released on or after 1st July 1987 from such service on the following grounds:-

(a) at his / her own request after earning his / her pension;or

(b) on medical grounds attributable to military service or circumstances beyond his / her control and awarded medical or other disability pension;or

(c) otherwise than at his / her own request after earning his pension, as a result of reduction in establishment;or

(d) after completing specific period of engagement, otherwise than at his / her own request or by way of dismissal or discharge on account of misconduct or inefficiency and has been given agratuity;

ஒன்றியத்தின் ஆயுதப் படைகளில் (போரிடுபவராகவோ இல்லாமலோ) எந்த ஒரு படிநிலையிலும் பணியாற்றியிருந்து அத்தகைய பணியிலிருந்து,

(a) தம் ஓய்வூதியத்தை ஈட்டிய பின்பு தம் சொந்த வேண்டுகோளிலோ; அல்லது

(b) இராணுவப் பணிக்கு சார்ந்ததக்க மருத்துவ காரணங்களின் பேரிலோ அல்லது தம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழநிலைகளின் பேரிலோ மற்றும் மருத்துவ அல்லது பிற தகவுக்கேடு ஓய்வூதியம் வழங்கி; அல்லது

(c) படைக்குறைப்பின் விளைவாகத், தம் ஓய்வூதியத்தை ஈட்டியபின்பு, தம் சொந்த வேண்டுகோளில் அல்லாமல் பிறவாறாக; அல்லது

(d) தம் சொந்த வேண்டுகோளிலோ அல்லது தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக பணிநீக்கம் அல்லது பணிவிடுப்பு மூலமாகவோ அல்லாமல் பிறவாறாக குறிப்பிட்ட கால போர் நடவடிக்கையை முடித்த பின்ப மற்றும் பணிக்கொடை ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது;

1987, ஜூலை 1 ஆம் தேதியன்றோ அதற்கு பின்போ ஓய்வு பெற்றிருக்கும் அல்லது விடுவிக்கப் பெற்றிருக்கும் நபர் எவரும் என்று பொருள்படும் ;

(v) any person of the Territorial Army of the following categories, namely, pension holder for continuous embodied service, person with disability attributable to military service and gallantry award winner retired on or after 15th November 1986; or

பின்வரும் வகையினர்களின் மண்டல இராணுவத்தின் நபர் எவரும், அவர்களாவர், 1986, நவம்பர் 15 அன்றோ அதற்கு பின்போ ஓய்வு பெற்ற இராணுவப் பணிக்கு சாரத்தக்க மற்றும் போர்க்களத்தில் பரிசுப் பெற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் போர்க்களத்தில் வீர செயல் புரிந்தமைககாக;

(vi) any person of the Army Postal Service who retired on or after 19th July 1989 directly from the said service without reversion to Postal and Telegraph Department with pension or who has been released on or after 19th July 1989 from such service on medical grounds attributable to military service or circumstances beyond his control and awarded medical or other disability pension;or

1989 ஜூலை 19 அன்றோ அதற்குப் பின்போ இராணுவப் பணியிலிருந்து நேரடியாக, ஓய்வூதியத்துடன் அஞ்சல் மற்றும் தந்தித்துறைக்கு திருப்பியனுப்பாமல் ஓய்வு பெற்ற அல்லது அத்தகைய பணியிலிருந்து இராணுவப் பணிக்கு சார்ந்ததக்க மருத்துவக் காரணங்களின் பேரில் அல்லது தம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளில் அத்தகைய பணியிலிருந்து 1989 ஜூலை 19 அன்றோ அதற்குப் பின்போ விடுவிக்கப்பட்டிருக்கும் மற்றும் மருத்துவ அல்லது பிற தகவுக்கேட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கும் நபர் எவரும் என்று பொருள்படும்; அல்லது

(vii) any person discharged on or after July 1987 under Army Rule 13(3) III for the reason that his service is no longer required and in receipt of pension;
Provided that in all cases, an ex-servicemen once recruited to a post in any service

or class or category, cannot claim the concession of being called an ex-servicemen for his further recruitment:

Provided further that a person discharged before July 1987 under Army Rule 13 (3) III (V) for the reason that his service is no longer required is not an ex-servicemen.

இராணுவ விதி 13(3) III (V)-ன்படி அவருடைய பணி இனிமேலும் தேவையில்லை என்ற காரணத்திற்காக 1987 ஜூலையிலோ அதற்குப் பின்போ விடுவிக்கப்பட்டு ஓய்வூதியம் பெறும் நபர் எவரும் என்று பொருள்படும்: வரம்புரையாக, அனைத்து நேர்வுகளிலும், எந்த ஒரு பிரிவு அல்லது பணி அல்லது வகை எதிலும் உள்ள ஒரு பணியிடத்திற்கு ஒருமுறை ஆளெடுக்கப்பட்ட முன்னாள் இராணுவ வீரர் ஒருவர், அவருடைய எதிர்காலப் பணியமர்த்தத்திற்காக ஒரு முன்னாள் இராணுவ வீரருக்கான சலுகையை கோர முடியாது:

மேலும் வரம்புரையாக, இராணுவ விதி 13(3)III(V)-ன்படி அவருடைய பணி இனிமேலும் தேவையில்லை என்ற காரணத்திற்காக 1987-ல் ஜூலைக்கு முன்பு பணியிலிருந்து விடுவிக்கபபட்ட நபர் ஒருவர் ஒரு முன்னாள் இராணுவ வீரர் அல்ல.

(h) An applicant who claims to have been demobilised from the Army or Navy or Air Force needs to produce only a properly authenticated extract from his Discharge Certificate (viz., a Bonafide Certificate) in the following form in support of his claim:
விண்ணப்பதாரர் இராணுவம் அல்லது கடற்படை அல்லது விமானப்படையிலிருந்து விடுவிக்கப்பட்டவர் என உரிமை கோரும் பொழுது, கோரிக்கைகளுக்கு ஆதாரமாக அவரது பணி விடுப்புச் சான்றிதழின் (Discharge Certificate) உறுதியொப்பமிட்ட எடுகுறிப்பினை சான்றிதழாக பின்வரும் படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

(a) Name of the applicant
(b) Rank held
(c) Date of enrolment
(d) Date of discharge
(e) To state clearly whether the applicant is an‘Ex-servicemen’
(f) Whether in receipt of pension
(g) P.P.O.No.
(h) Conduct and character while serving in the defence forces
(i) Name of the post applying for

அ. விண்ணப்பதாரரின் பெயர்
ஆ. வகித்த பதவி
இ. படையில் சேர்ந்த நாள்
ஈ. விடுவிக்கப்பட்ட நாள்
உ. விண்ணப்பதாரர் முன்னாள் ராணுவத்தினரா என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்
ஊ. ஓய்வூதியம் பெற்று வருபவரா
எ. ஓய்வூதிய உத்தரவு எண்
ஏ. ராணுவத்தில் பணிபுரிந்துபோது நடத்தையும் ஒழுக்கமும்
ஐ. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்

(i) Persons serving in the Armed Forces shall be eligible to apply for posts, if they are due to complete the specified term of their engagement in the Armed Forces, within one year from the last date prescribed by the Judicial Recruitment Cell, High Court, Madras for receipt of the online application in respect of this recruitment. All such applicants while making the applications shall submit a self-undertaking and a form of certificate from their Commanding Officer in the format given in Annexure-G.
சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவின் அறிவிக்கை வெளியிட்டு விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதி நாளிலிருந்து ஓராண்டுக்குள் முப்படைப் பணியிலிருந்து, விடுவிப்புப் பெறவிருக்கும் ராணுவ வீரர்கள் அனைத்து தகுதிகளையும் பெற்றிருப்பின் அவர்களும் விண்ணப்பிக்கலாம். அவ்வகை விண்ணபதாரர்கள் கீழ்காணும் இணைப்பு - G என்ற படிவத்தில் உறுதிமொழிப் படிவத்தினை அளிக்க வேண்டும்.

(j) In the case of an applicant who claims to be a member of Scheduled Castes/Scheduled Caste (Arunthathiyars) or Scheduled Tribes or Most Backward Classes/ Denotified Communities or Backward Classes (other than Muslim) or Backward Classes Muslim, a certificate from the following authority noted against each, should be produced in the form prescribed, referred to in G.O.(Ms) No.781, Revenue Department, dated 2nd May 1988.

ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிடர்(அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர்கள் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர் தவிர) அல்லது பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய வகுப்பினர்கள், வருவாய் துறையால் 02.05.1988 ஆம் நாளிட்ட அ.ஆ.எண்.781-இல் உளளது போல நிர்ணயிக்கப்பட்ட படிவம்தனில், ஒவ்வொரு பிரிவிற்கும், சான்றளிக்கும் அதிகாரம் கொண்டவர்களிடம் சான்றிதழை பெற்று சமர்பித்தல் வேண்டும்.

ஒவ்வொரு பிரிவிற்கும் சான்றிதழ் வழங்கும் அதிகாரிகளின் விவரம் பின்வருமாறு:

| Name of the Community (பிரிவுகளின் பெயர்) | Competent Authority to issue the Certificate (சான்றளிக்கும் அதிகாரம் பெற்றவர்கள்) |
|---|---|
| ST<br>பழங்குடியினர் | Revenue Divisional Officer / Assistant Collector / Sub-Collector / Personal Assistant (General) to the Collector of Chennai / District Adi-Dravidar Welfare Officer<br>வருவாய்க் கோட்ட அலுவலர்/ உதவி ஆட்சியர் / சார் ஆட்சியர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| SC / SC(A)<br>ஆதிதிராவிட/ஆதிதிராவிட (அருந்ததியர்) | Taluk Tahsildar<br>வட்டாட்சியர் |

| | |
|---|---|
| MBC / DC, BC (other than Muslim) and BC Muslim,<br>மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் | Revenue Officer not lower in rank than a Tahsildar or Head Quarters Deputy Tahsildar or Special Deputy Tahsildar appointed to issue Community Certificate or Deputy Tahsildar (School Certificates) or Executive Deputy Tahsildar (in respect of Chennai district) or Additional Head Quarters Deputy Tahsildar or Zonal Deputy Tahsildar<br>வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்தது்றை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச்சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணைவட்டாட்சியர் அல்லது துணைவட்டாட்சியர் (பள்ளி சான்றிதழ்கள்) அல்லது செயற் துணைவட்டாட்சியர் (சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை) அல்லது கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அல்லது மண்டலத் துணை வட்டாட்சியர். |
| Thottia Naicker (including Rajakambalam, Gollavar, Sillavar, Thockalavar, Thozhuva Naicker and Erragollar) included in the list of MBC/DC<br>மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாய்க்கர் (ராஜகம்பாலம், கொல்லவர், சில்லாவர், தொக்களவர், தொழுவ நாய்க்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) | Head Quarters Deputy Tahsildar<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர் |

(k) Community certificate should have been issued by the competent authorities referred to above, in whose jurisdiction the applicant claims to have permanent residence. The certificate obtained by the applicants in the form other than the one referred to in G.O. (Ms.) No.781, Revenue Department, dated 2nd May1988 and solely based on the entries in S.S.L.C. or Transfer Certificate or other school / college records will not be accepted.

விண்ணப்பதாரரின் நிரந்தரக் குடியிருப்பு இருக்கும் பகுதி எவருடைய அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதோ அந்த தகுதிவாய்ந்த அலுவலரால் சாதிச்சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அரசாணை எண். 781, வருவாய்த்துறை, நாள் 02.05.1988ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச் சான்றிதழ்கள்,

உயர்நிலைப் பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச்சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஆகியவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

உரியபடிவத்தில் விண்ணப்பதாரர்கள் பெற்ற சான்றிதழானது, வருவாய் துறையால் 02.05.1988 ஆம் நாளிட்ட அ.ஆ.எண்.781-ல் கண்ட படிவத்தில் இல்லாமல் பள்ளி இடைநிலை இறுதிச்சான்றிதழ் ( SSLC ) தகவலினை உள்ளீடாக கொண்ட அல்லது மாற்றுசான்றிதழ் அல்லது பிறபள்ளிகள் / கல்லூரி பதிவுகள் ஏற்கப்படாது.

(l) Transgender candidates, who do not possess any community certificate shall be considered under Most Backward Class as per G.O. (Ms.) No.28, Backward Classes, Most Backward Class and Minorities Welfare Department, dated 06.04.2015.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சிறுபான்மையினர் நல்வாழ்வுத்துறையின் 06.04.2015 ஆம் நாளிட்ட அ.ஆ.எண்.28ன் படி எந்தவொரு வகுப்பு சான்றிதழையும் பெறாத திருநஙகை விண்ணப்பதாரர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களாக கருதப்படுவர்.

(m) Transgender candidates who belong to Scheduled Caste / Scheduled Caste (Arunthathiyar) / Scheduled Tribe communities and possess community certificate as such, shall be considered as per their respective community.

சாதிச் சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர் /ஆதிதிராவிட– (அருந்ததியர்) பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை விண்ணப்பதாரர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

(n) Transgender candidates who belong to communities other than Scheduled Caste / Scheduled Caste (Arunthathiyar) / Scheduled Tribe and possess community certificate as such, are permitted to choose to be considered as belonging to their own community or as Most Backward Class, whichever is advantageous to them, at the time of Registration itself. Once the individual opts to be considered as a particular community, it shall be crystallized and this option shall not be changed in the future.

ஆதிதிராவிடர் / ஆதி திராவிட –அருந்ததியர் / பழங்குடியினர் வகுப்பைத் தவிர்த்து மற்ற வகுப்பினைச் சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச் சான்றிதழ் பெற்றுள்ள திருநங்கை விண்ணப்பதாரர், அவருடைய வகுப்பு (Class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில், அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, பதிவின் போதே தேர்வு செய்ய வேண்டும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட வகுப்பை எதிர்வரும் காலங்களில் மாற்ற இயலாது.

(o) The transgender candidates who identify themselves as “Female” by self- declaration supported by the Certificate (ID Card) issued by the Tamil Nadu Transgender Welfare Board (TNTGWB) will be considered against both 30% reservation for women as well as 70% reservation for the General Category (both Men &Women).

தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியம் வழங்கிய சான்றிதழின் (அடையாள அட்டை) மூலம் தங்களை “பெண்” என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் திருநங்கைகள், பெண்களுக்குரிய 30% இடஒதுக்கீடு மற்றும் பொது வகையினருக்குரிய (ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகய இருவருக்கும்) 70% இடஒதுக்கீடு இரண்டிலும் பரிசீலிக்கப்படுவர்.

(p) The transgender candidates who identify themselves as "Male" by self- declaration supported by the Certificate (ID Card) issued by the Tamil Nadu Transgender Welfare Board (TNTGWB) will be considered 70% reservation for the General Category (both Men &Women).
தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியம் வழங்கிய சான்றிதழின் (அடையாள அட்டை) மூலம் தங்களை "ஆண்" என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் திருநங்கைகள், பொது வகையினருக்குரிய (ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவருக்கும்) 70% இடஒதுக்கீட்டில் பரிசீலிக்கப்படுவர்.

**Source for clauses (l) to (p) above: G.O. (Ms) No.90, Social Welfare and Nutritious Meal Programme (SW8(2)] Department, dated 22.12.2017.**

**மேலே குறிப்பிட்ட வகுப்புகள் (l) to (p) வகுப்புக்கு ஆதாரம் 22.12.2017 ஆம் நாளிட்ட அ.ஆ.எண்.90 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை (SW8(2))**

## 4. PRIORITY RESERVATION IN APPOINTMENT (நியமன முன்னுரிமை இடஒதுக்கீடு):

According to G.O.(Ms.) No.122, Human Resource Management (K2) Department, dated 02.11.2021 (regarding priority details for employment to direct recruitment):
02.11.2021ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.122, மனிதவள மேலாண்மைத் (கே.2) துறையின் கீழ் (நேரடி ஆட்சேர்ப்பு வேலைவாய்ப்புக்கான முன்னுரிமை விவரங்கள்)

(i) Heirs (sons/Daughters) who have lost both father and mother due to Corona or any other reason.

Explanation:

Persons who have lost both father and mother, staying and studying in the orphanages run by the private and Government Institutions are eligible for priority based on the certificate issued by the respective institutions. Persons from the Rural areas who have lost both father and mother and not joined in the recognized orphanages, are also eligible for priority based on the certificate issued by the Revenue Tahsildar.
(G.O. (Ms.) No.8 Personnel and Administrative Reforms (R) Department,dated 10.01.2000).

கொரோனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்)

விளக்கம்:-

தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும், தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள், அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும், அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற தாய், தந்தையற்ற நபர்கள், வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் சான்றிதழ் அடிப்படையிலும், முன்னுரிமை பெற தகுதியுடையவராவார்கள்.

(ii) First Generation Graduates
முதல் தலைமுறை பட்டதாரிகள்.

(iii) Persons those who have studied in Tamil medium in Tamil Nadu Government schools.
தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ் மொழியில் பயின்ற நபர்கள்.

(iv) Disabled Ex-Servicemen including Ex-Indian Peace Keeping Force Personnel Disabled Ex-Servicemen mean Ex-Servicemen who while serving in the armed forces of the Union were disabled in operation against enemy or in disturbed areas.
போரில் உடல் தகுதியை இழந்த முன்னாள் இராணுவத்தினர்.

(v) Upto two members of the family (widows / Sons / Daughters / next of kin) of the enrolled personnel of the Armed Forces including the Indian Peace Keeping Force who were killed or disabled in action and are totally unfit for re-employment leaving their families in indigent circumstances, and
Upto two members of the family (widows/sons/Daughters/next of kin) of Border Security Force Personnel killed in action, and
Upto two members of the family (widows / Sons / Daughters / next of kin) of the personnel of Assam Rifles killed in action and
Ex-personnel of Indo Tibetan Border Police/Disabled Personnel of Indo Tibetan Border Police boarded out of retired prematurely due to service conditions.
Upto two members of the family (widows / Sons / Daughters / next of kin) of the Personnel of the Indo Tibetan and Border police who were killed or diabled in action and are totally unfit for re-employment leaving their families in indigent circumstances).
போரில் மரணமடைந்த அல்லது உடல் தகுதியை இழந்த இராணுவ வீரர்களின் குடும்பத்தினரில் இரண்டு நபர்கள் வரை.

(vi) Destitute Widows.
ஆதரவற்ற விதவைகள்.

(vii) Inter-caste married couple (where one of the spouse belongs to Scheduled Caste / Scheduled Tribe).
கலப்பு திருமண தம்பதியினர் (தம்பதியரில் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடி இனத்தவராக இருக்க வேண்டும்).

(viii) Ex-Servicemen and Ex-Indian Peace keeping Force Personnel and the wives,sons and unmarried daughters of serving Millitary Personnel of Ex-Servicemen and of Ex-Indian Peace Keeping Force.
முன்னாள் இராணுவத்தினர் அல்லது அவர்களது மனைவி அல்லது மகன் அல்லது திருமணமாகாத மகள் மற்றும் தற்போது பணியில் உள்ள இராணுவத்தினரின் மனைவி அல்லது மகன் அல்லது திருமணமாகாத மகள்.

(ix) The legal heirs of Freedom Fighters and Tamil Savants.
சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் தமிழ்மொழி காவலர்களின் நேரடி வாரிசுதாரர்கள்.

(x) Indian Nationals returning from Burma / Sri Lanka and East African countries of Kenya, Uganda and Tanzania due to repatriation.
பர்மா, இலங்கை, கென்யா, உகண்டா மற்றும் தான்சானியா நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய இந்தியர்கள்.

(xi) Members of the family (including members of Scheduled Caste / Scheduled Tribe) whose lands have been acquired for Government purposes as well as for the projects of the Public Sector Undertakings subject to the condition that preference should be given to those who are dependent for their livelihood primarily or wholly on the lands acquired and from among them, to members of the Scheduled Castes and Scheduled Tribes who may be eligible for employment.
அரசின் திட்டங்களுக்காக, பொதுமக்களின் நிலங்கள், அரசால் கையகப்படுத்தப்பட்டிருப்பின், அந்த குடும்ப உறுப்பினர்களில் எவரேனும் ஒருவர்.

(xii) The Differently abled person viz., the blind, deaf,orthopedically handicapped persons,mentally retarded and leprosy cured etc., provided the handicap is not such as would render the candidate unfit for efficiently discharging the duties attached to the post.
மாற்றுத்திறனாளிகள்.

(xiii) Discharged Government Employees (State)
மாநில அரசு பணியிலிருந்து விடுவிக்கப்பட்டோர்.

(xiv) Persons freed from bonded Labour System, Sons and unmarried daughters of the released bonded labourers.
மீட்கப்பட்ட கொத்தடிமைகள் அல்லது அவர்களது மகன் அல்லது திருமணமாகாத மகள்.

(xv) Inmates and Ex-inmates of Approved Schools and Vigilance institutions under the Government of Tamil Nadu.
தமிழ்நாடு அரசின் கீழ் வரும் விழிப்புப்பணி நிறுவனம் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள இல்லவாசிகள் மற்றும் முன்னாள் இல்லவாசிகள்.

(xvi) The Hindi Pandits and other language Pandits who have been ousted on account of introduction of two language formulas.
இரு மொழித் திட்டம் செயலாக்கத்தினால் பணியிழந்த இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்கள்.

(xvii) Persons who have served in the Territorial Army for more than six months and on their discharge revert to part-time employment in the Territorial Army.
பிராந்திய படையில் ஆறு மாதத்திற்கு மேல் பணிபுரிந்து, பின்னர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து பிராந்திய படையில் பகுதி நேர பணியாளராக பணிபுரிவோர்.

(xviii) Territorial Army Personnel and Ex- Servicemen of Auxiliary Air Force who were embodied in the present emergency and have been disembodied after a continuous engagement of over six months.
அவசர காலத்தில் பிராந்திய படை மற்றும் துணை விமானப் படையில் சேர்க்கப்பட்டு தொடரச்சியாக ஆறு மாதத்திற்கு மேல் பணிபுரிந்து பின்னர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.

(xix) All the retrenched Employees of the Census Organization.
பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவன பணியாளர்கள்.

(xx) Persons who have worked as Youth Services Corps Volunteers for a minimum period of one year upto 31.12.1984.
31.12.1984 வரையில், குறைந்தது ஒரு வருட காலம் பணிபுரிந்த இளைஞர் சேவைப்படை தன்னார்வலர்கள்.

## 5. QUALIFICATION IN TAMIL:

As per Section 21 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016, no person shall be eligible for appointment to any of the service by direct recruitment unless he/she has an adequate knowledge of the official language of the State, namely, Tamil.

Provided that a person, being otherwise qualified for appointment to the post to which recruitment is to be made, may apply for recruitment to the post, despite the fact that, at the time of such application, he/she does not possess an adequate knowledge of Tamil. If selected and

appointed, such a candidate should pass the Second Class Language Test (Full Test) in Tamil conducted by the TNPSC, within a period of two years from the date of appointment, failing which he/she will be discharged from the service.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 21ன் படி எவரும், மாநிலத்தின் ஆட்சிமொழியில், அதாவது தமிழில் போதுமான அறிவு கொண்டிருந்தாலன்றி நேரடி நியமனத்தின் மூலமாக எந்தப் பணியிலும் பணியமர்தப்படுவதற்கு தகுதியுடையவர் அல்லர்.

எனினும், எந்தப் பணியிடத்திற்கு நியமனம் நடைபெற இருக்கிறதோ அந்தப் பணியிடத்திற்கு பணி நியமனம் செய்ய, பிறவகைகளில் தகுதியுடையவராக இருக்கும் ஒருவர், அப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் போது, போதுமான தமிழறிவு கொண்டிருக்கவில்லையென்றாலும் அவர் அந்தப் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டு, பணியமர்த்தம் செய்யப்பட்டால், பணிநியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்வாணையத்தினால் நடத்தபெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தவறினால், அவர் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்.

## 6. HOW TO APPLY (விண்ணப்பிப்பது எப்படி) :-

(a) **FOR REGISTRATION:** The applicants are required to visit https://www.mhc.tn.gov.in and enter the following details in the 'Register yourself' Column:-

**பதிவு செய்தல்**: விண்ணப்பதாரர், பதிவு செய்வதற்காக, மெட்ராஸ் உயர் நீதிமன்ற இணையதளத்தில் (https://www.mhc.tn.gov.in) பின்வரும் விவரங்களைப் பதிவுசெய்தல் வேண்டும்.

1. Email – ID (மின்னஞ்சல் முகவரி)
2. Mobile No (கைப்பேசி எண்)
3. Name (As in the School Certificate or Govt. Gazette, if name changed)
   பெயர் (பள்ளிச் சான்றிதழில் உள்ளவாறு அல்லது பெயர் மாற்றப்பட்டிருப்பின் அரசிதழில் உள்ளவாறு )
4. Aadhar Number (ஆதார் எண்)
5. Create New Password
   புதிய கடவுச்சொல்லை (Password) உருவாக்குதல
6. Retype Password
   மீண்டும் கடவுச்சொல்லை உறுதி செய்தல்
7. Captcha Code (கேப்சா குறியீடு)

After the applicants have successfully entered all the details, a message will appear in the screen as "You have successfully registered" and an OTP will be sent to the Registered Mobile Number of the applicants. The applicants can login to the website by using their registesred e-mail id as the user id, the password and the OTP sent to their registered mobile number.

**NOTE:**

(i) The applicants are requested not to disclose their login credentials to anyone and the Judicial Recruitment Cell, High Court, Madras will not be responsible for any misuse of data. Registered e-mail ID and registered password of the candidates must be noted and preserved for future use.

(ii) Applicants are advised to have a valid Mobile Number/valid personal E-mail ID. In case the applicants do not have a valid email ID/Mobile Number, they should create their own email ID and obtain mobile number before applying online and must keep the email account/mobile number active throughout the selection process.

(iii) No request regarding change in Mobile Number/E-mail ID will be entertained. High Court will send various intimations relating to the recruitment through SMS/E-Mail only to the Mobile Number / E-mail ID registered during the process of recruitment.

(iv) The Judicial Recruitment Cell, High Court, Madras will not be responsible in any manner, for non delivery of SMS/email at any stage either due to non-lifting of the mobile phone or if the same is out of coverage area or is out of order due to some technical fault on the part of the candidate or service provider.

(v) It will be the responsibility of the applicants to update himself by visiting the website of the Judicial Recruitment Cell, High Court, Madras, viz., https://www.mhc.tn.gov.in periodically for any important announcement.

(vi) The Judicial Recruitment Cell, High Court, Madras will not be responsible in case of any communication not reaching the applicant due to defect in given address, email ID, mobile number, etc.

விண்ணப்பதாரர்கள் அனைத்து விவரங்களையும் வெற்றிகரமாக பதிவுசெய்தபின், கணிணி திரையில் “You have successfully registered” என்று தோன்றும். அதன்பிறகு அவருடைய பதிவுசெய்யப்பட்ட கைபேசிக்கு OTP அனுப்பப்படும். விண்ணப்பதாரர்கள், தங்களது மின்னஞ்சல் முகவரியை பயனாளர் குறியீடாகவும் (user ID), பதிவின்போது அவரால் உருவாக்கப்பட்ட கடவுச்சொல் மற்றும் OTP பயன்படுத்தி இணையதளத்திற்குள் login செய்துகொள்ளலாம்.

குறிப்பு

(i) விண்ணப்பதாரர்கள், பதிவு செய்வதற்காக அளிக்கப்பட்ட விவரங்ளை எவருக்கும் தெரிவிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விவரங்கள் ஏதும் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கு நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு, மெட்ராஸ் உயர் நீதிமன்றம் பொறுப்பாகாது. விண்ணப்பதாரர்களின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மற்றும் பதிவு செய்யப்பட்ட கடவுச்சொல்லை குறித்துக்கொண்டு, எதிர்கால பயன்பாட்டிற்காக பாதுகாத்துவர வேண்டும்.

(ii) "விண்ணப்பதாரர்கள செல்லத்தக்க கைப்பேசி எண்/செல்லத்தக்க தனி மின்னஞ்சல் முகவரியை வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். அது பணிநியமன காலம் முழுமைக்கும் பயன்பாட்டிலிருக்கவேண்டும். விண்ணப்பதாரர் செல்லத்தக்க மின்னஞ்சல் முகவரி/கைப்பேசி எண் வைத்திருக்கவில்லையெனில், இணையவழி விண்ணப்பிப்பதற்குமுன் தனது (புதிய) மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி, கைப்பேசி எண்ணையும் பெற்றுக்கொள்ள வேண்டும். தெரிவு நடவடிக்கை நிறைவு

| | |
|---|---|
| | பெறும்வரை மின்னஞ்சல் முகவரி கணக்கு/கைப்பேசி எண்ணைப் பயன்பாட்டில் வைத்திருக்கவேண்டும்.<br>(iii) கைப்பேசி எண்/மின்னஞ்சல் முகவரியை மாற்றக் கோருவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. உயர் நீதிமன்றம், பணிநியமன நடைமுறையின்போது, பணிநியமனம் தொடர்பான பல்வேறு தகவல்களை பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்/மின்னஞ்சல் முகவரிக்குத்தான் குறுஞ்செய்தி (SMS)/மின்னஞ்சல (E-mail) முகவரி மூலமாக உயர்நீதிமன்றம் அனுப்பும்."<br>(iv) கைப்பேசி எண்ணில் திடீரென ஏதும் பழுது ஏற்படுவதாலோ அல்லது அது செயல்பரப்பு எல்லைக்கு வெளியே இருந்தாலோ அல்லது விண்ணப்பதாரர் அல்லது சேவை வழங்குநரின் தரப்பில் ஏற்படுகின்ற தொழில்நுட்ப கோளாறு காரணமாக பழுது ஏற்பட்டிருந்தாலோ, அதன் காரணமாக எந்தநிலையிலாவது உயர்நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட குறுஞ்செய்தி/மின்னஞ்சல் விண்ணப்பதாரருக்கு சென்றடையவில்லை எனில் அதற்கு எவ்விதத்திலும் நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு, மெட்ராஸ் உயர் நீதிமன்றம் பொறுப்பாகாது.<br>(v) விண்ணப்பதாரர்கள், முக்கியமான அறிவிப்புக்காக மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் இணையதளத்தை (https://www.mhc.tn.gov.in) அவ்வப்போது வெளியிடப்படும் தகவல்களை பார்வையிட்டு பதிவு செய்வதற்குரியவராக்கி கொள்வது அவர்களின் பொறுப்பாகும்.<br>(vi) கொடுக்கப்பட்ட முகவரி, மின்னஞ்சல் முகவரி, கைப்பேசி எண் போன்றவற்றில், ஏதேனும் குறைபாடு காரணமாக விண்ணப்பதாரருக்கு தகவல் ஏதும் சென்றடையாவிடில், அதற்கு நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு, மெட்ராஸ் உயர் நீதிமன்றம் பொறுப்பாகாது. |
| (b) | **<u>(i) STEP ONE (PERSONAL INFORMATION):</u>** The applicants shall fill their personal information as required in the application form as per 1(g) of Notification. They shall upload their scanned copy of passport size photograph of high contrast and their full signature in Tamil or English. After submitting the personal information, the candidate shall select **'SAVE/NEXT STEP'** button to complete step-1 and proceed to step-2.<br>**<u>Note:-</u>**<br>**(**For photograph, the size of the file should be between 20 KB and 50 KB with dimensions of 230 pixels height and 200 pixels width. For signature, it should be between 10 KB and 20 KB with dimensions of 60 pixels height and 140 pixels width**)**<br><u>முதல் படி (தனிப்பட்ட தகவல்)</u> விண்ணப்பதாரர்கள், அறிவிக்கையின் 1(g)ல் கோரப்பட்டவாறு, தங்களது தனிப்பட்ட தகவலைப் பூர்த்தி செய்தல்வேண்டும். அவர்கள் தங்களது பாஸ்போர்ட் அளவு மிகத் தெள்ளத்தெளிவுடைய புகைப்படம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தங்களது முழு கையொப்பமிட்டு, அதன் நிழல்-ஒளி நகலை (Scanned copy) பதிவேற்றம் செய்தல் வேண்டும். தனிப்பட்ட தகவலைப் பூர்த்திசெய்த பிறகு, 1-ஆவது |

| | |
|---|---|
| | படியை நிறைவு செய்து 2-ஆவது படிக்கு செல்வதற்கு அடுத்தது (**NEXT STEP)** என்ற பொத்தானை தெரிவுசெய்தல் வேண்டும்.<br><br><u>குறிப்பு</u><br><br>புகைப்படத்தின் பின்புலம் வெள்ளை நிறமாகவும் மற்றும் அவரின் உடை அடர் நிறத்துடன் இருக்க வேண்டும். புகைப்படத்தின் பின்புலம் அடர்நிறத்துடனோ அல்லது கண்ணாடி அணிந்திருந்தாலோ புகைப்படம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. புகைப்படத்தின் செங்குத்து மற்றும் கிடைமட்ட பகுதிகள் (தாடை முதல் நெற்றி வரை, வலது முதல் இடது எல்லை வரை தெளிவாக), கோப்பின் அளவு *20***KB** மற்றும *50* **KB**-ககிடையே 200 பிக்செல் உயரமும் 230 பிக்செல் அகலமும் கொண்ட கன அளவுடன் இருத்தல்வேண்டும், கையொப்பத்திற்கு 20 **KB** கீழ், 140 பிக்செல் உயரமும், 60 பிக்செல் அகலமும் கொண்ட கனஅளவுடன் இருத்தல்வேண்டும். |
| | **<u>(ii) STEP TWO (EDUCATIONAL QUALIFICATION DETAILS):</u>** The applicants shall fill the educational particulars as required in the application form. After submitting the educational particulars, the applicants shall select **"SAVE/NEXT STEP"** button to complete step -2 and proceed to step-3.<br>இரண்டாம் படி (கல்வித்தகுதி விவரங்கள்) விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப் படிவத்தில் கோரப்பட்டுள்ளவாறாக கல்வி பற்றிய விவரங்களைப் பூர்த்தி செய்தல்வேண்டும். கல்வி பற்றிய விவரங்களைப் பூர்த்தி செய்தபிறகு, 2-ஆவது படியை நிறைவு செய்து, விண்ணப்பதாரர் "அடுத்தபடி "(**SAVE NEXT STEP**)" என்ற பொத்தானை தெரிவுசெய்து, 3-ஆவது படிக்கு செல்லவேண்டும். |
| | **<u>(iii) STEP THREE (ADDITIONAL INFORMATION):</u>** The applicants shall fill the Additional information as required in the application form. After submitting the requisite particulars **and uploading the necessary documents**, they shall select **"SAVE/NEXT STEP"** button to complete step -3 and proceed to step-4.<br>மூன்றாவது படி (கூடுதல் தகவல்) விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்டுள்ளவாறாக கூடுதல் தகவலைப் பூர்த்திசெய்தல் வேண்டும், பூர்த்தி செய்தபிறகு தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்தபின் 3-ஆவது படியை நிறைவு செய்து **SAVE NEXT STEP** என்ற பொத்தானை தெரிவுசெய்து, 4-ஆவது படிக்கு செல்லவேண்டும. |
| | **<u>(iv) STEP FOUR (DECLARATION):</u>** The applicants shall fill the declarations as required in the application form. After completing the declaration form, they shall select **"NEXT STEP"** button to complete step -4.<br>நான்காவது படி (உறுதிமொழி) விண்ணப்பதாரர் விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்டுள்ளவாறு உறுதிமொழியைப் பூர்த்தி செய்தல்வேண்டும், விவரங்களைப் பதிவுசெய்த பிறகு, 4-ஆவது படியை நிறைவு செய்ய "**NEXT STEP**" பொத்தானை தெரிவுசெய்தல் வேண்டும். |

**(v) STEP FIVE (CONFIRM YOUR DETAILS):**

(i) On completion of step-4, the details furnished by the applicants in steps 1 to 4 appear on the screen as preview. The applicants shall carefully peruse the details furnished and confirm the same by selecting "SUBMIT" button.

(ii) Before proceeding to next step, if the applicant intends to make any correction or modification in the details furnished in the previous step, they can select "PREVIOUS STEP" and make necessary modification.

(iii) When the applicants choose "SUBMIT" button, a pop up dialog box will appear and indicate to the applicants that if they choose to select "OK" option, they will not be permitted to make any alterations/changes or edit the details provided by them and if the applicants want to edit the information provided by them, they shall select the "**CLOSE**" option to cancel and go back to previous steps.

**Note:** On selecting the "OK" option, for the applicants who are not required to pay fee, a message that their applications have been successfully submitted will appear and under the status column, "application process completed" will appear. The applicants can view their application by selecting the view option.

For applicants who are required to pay the examination fee, a dialog box with three options namely, 1**.View**, 2. **Download Challan, 3. Upload challan** will appear and under the status column, "application is submitted, payment pending" will appear. The applicants who are required to pay the examination fee shall select the "**download"** challan option. A challan containing the required details of the applicant will be generated automatically. The applicant shall take the printout of the challan and shall make the payment, following the procedure mentioned in '**Mode of Payment of examination fees' below.**

(iv) After making payment, the applicants shall select the Upload challan option and fill the particulars of the challan and upload the copy of the same (in JPEG picture format)(**size:below 100kb**) to complete the process. On completion, a message that **"the application has been successfully submitted"** will appear on the screen.

(v) The applicants who wish to peruse and take printout of their filled-in application form shall select the view option and download their application in PDF form.

(vi) The applicants need not send the print out of the application form to the undersigned or to the High Court.

**ஐந்தாவது படி (அளித்த தகவல்களை உறுதிசெய்தல்)**

(i) நான்காவது படியை நிறைவு செய்தபிறகு, ஒன்று முதல் நான்கு படிகளில் விண்ணப்பதாரர்கள் அளித்த விவரங்கள் திரையில் தோன்றும், அதை விண்ணப்பதாரர்கள் சரிபார்த்து சரியானது தான் என உறுதி செய்த பிறகு submit பொத்தானை தெரிவுசெய்தல் வேண்டும்.

| | |
|---|---|
| | (ii) விண்ணப்பதாரர்கள் அடுத்த நிலைக்கு செல்வதற்கு முன்பு தான் ஏற்கனவே சமர்பித்துள்ள தகவல்களில் ஏதேனும் திருத்தமோ அல்லது மாற்றமோ செய்ய விரும்பினால், அவர் 'previous step' பொத்தானை தெரிவு செய்து மாற்றங்கள் செய்து கொள்ளலாம்.<br>(iii) விண்ணப்பதாரர்கள் 'submit' பொத்தானை தெரிவு செய்தவுடன் திரையில் தற்காலிக விவர குறிப்பு பகுதி (pop up dialog box) தோன்றும். அதில் விண்ணப்பதாரர்கள் Ok தெரிவு செய்தால். அதன்பிறகு விண்ணப்பத்தில் எந்த திருத்தமும் செய்ய இயலாது. அவரால் அளிக்கப்பட்ட விவரத்தை மாற்றம் செய்ய விரும்பினால், Ok பொத்தனை தெரிவு செய்வதற்கு பதிலாக close பொத்தானை தெரிவு செய்து முந்தைய நிலைக்கு சென்று தேவையான திருத்தங்களை செய்து கொள்ள வேண்டியது.<br><br>பொத்தானை விண்ணப்பதாரர் தெரிவு செய்யும் பட்சத்தில், அவர் தேர்வு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டவராக இருப்பின், அவரது விண்ணப்பம் முறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற தகவல் திரையில் தோன்றும், மேலும் status column' மில் application process completed' என்று தோன்றும். விண்ணப்பதாரர்கள் தங்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை view option'ஐ தெரிவு செய்து பார்த்துக் கொள்ளலாம்.<br>கட்டணம் செலுத்த வேண்டிய விண்ணப்பதாரர்களுக்கு தற்காலிக விவர குறிப்பு பகுதி (pop up dialogue box) தோன்றும். அதில் 1.காட்சிப்படுத்துதல் (view) 2.செலுத்துச்சீட்டு (Challan) பதிவிறக்கம் செய்ய 3.செலுத்துச்சீட்டு (Challan) பதிவேற்றம் செய்ய போன்ற விருப்பத்தேர்வுகளுடன் கூடிய விவரக்குறிப்புப் பகுதி (Dialogue box) தோன்றும். Status column -ல் "Application is submitted, payment pending" என்று தோன்றும். தேர்வுக் கட்டணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் செலுத்துச்சீட்டை தெரிவு செய்தல்வேண்டும். விண்ணப்பதாரருக்கு தேவையான விவரங்களடங்கிய செலுத்துச்சீட்டு திரையில் தோன்றும். விண்ணப்பதாரர் செலுத்துச்சீட்டின் அச்சுப்பதிவுநகல் எடுத்துக்கொண்டு, கட்டணம் செலுத்தும் முறை/யில் குறிப்பிடப்பட்ட வழிமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்.<br>(iv) கட்டணம் செலுத்திய பிறகு, விண்ணப்பதாரர் கட்டணம் செலுத்துதலைத் தெரிவுசெய்து, செலுத்துச்சீட்டின் விவரங்களைப் பூர்த்திசெய்து, அந்த செயல்பாட்டை நிறைவுசெய்வதற்கு அந்த நகலை பதிவேற்றம் செய்தல் வேண்டும். பதிவேற்றம் செய்த பிறகு "The application has been successfully completed" என்ற தகவல் திரையில் தோன்றும்.<br>(v) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பார்வையிட்டு, அச்சுப்பதிவுநகல் எடுக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் காட்சிப்படுத்துதல் (View) தெரிவு |

| | |
|---|---|
| | செய்து தங்களது விண்ணப்பத்தை PDF படிவமுறையில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.<br>(vi) விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப அச்சுப்பதிவு நகலை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பத் தேவையில்லை. |
| **(c)** | All the particulars mentioned in the online application including name of the applicant, post applied for, educational qualifications, communal category, date of birth, address, e-mail ID etc. will be considered as final and no modification will be allowed after submission of the online application. Since certain fields are mandatory and cannot be edited, applicants are requested to fill the online application form with utmost care and caution as no correspondence regarding change of details will be entertained.<br>இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரின் பெயர், விண்ணப்பிக்கப்பட்ட பதவி, கல்வித் தகுதிகள், இனப்பிரிவு, பிறந்த தேதி, முகவரி, மின்னஞ்சல் முகவரி, தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு மையம், இன்னும் பிற விவரங்கள் அனைத்தும் இறுதியானதாகக் கருதப்படும். மேலும் இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தபிறகு எந்த திருத்தமும் செய்ய அனுமதிக்கப்பட இயலாது. சில களங்கள் கட்டாயமானதும், திருத்தியமைக்கப்பட இயலாததுமென்பதாலும் விவரங்களை மாற்றுவது தொடர்பான கடிதம் ஏதும் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதாலும். விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தை மிகுந்த கவனத்துடனும். விழிப்புடனும் பூர்த்தி செய்தல்வேண்டும். |
| **(d)** | **<u>Upload of Documents :</u>**<br>Applicants should upload the required documents like Destitute Widow Certificate, PSTM Certificate, PH certificate, certificate in proof of claim for "priority reservation" for proof in respect of such claims made in the online application with reference to this notification.<br>**<u>ஆவணங்களின் பதிவேற்றம்/சமர்ப்பிப்பு</u>**<br>விண்ணப்பதாரர்கள் இவ்வறிவிக்கை தொடர்பான விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் தொடர்பாக. அதாவது ஆதரவற்ற விதவை/ தமிழ் வழியில் பயின்றோர்/ மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் உரிமை கோரும் விண்ணப்பத்தாரர்கள் அதற்குரிய சான்றிதழ்களையும், சான்றுக்காக பதிவேற்றம் செய்ய வேண்டும். |

## 7. <u>MODE OF PAYMENT OF EXAMINATION FEES:-</u>
**<u>தேர்வுக்கட்டணம் செலுத்தும் முறை</u>**

| | |
|---|---|
| (a) | After submission of application, the applicant who is not exempted from payment of fee shall take printout of 'Challan' that is generated and remit the requisite fees along with service charges levied by the **<u>"Indian Bank"</u>** before the last date prescribed for remittance of fee, at any branch of Indian Bank. The branch concerned will retain the Bank Copy of the 'Challan' and return the "Applicant Copy and High Court's Copy" to the applicant, which shall be retained by the applicant and cited for all future references/disputes regarding the payment of fee and produce the same as and when required. |

| | |
|---|---|
| | இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவுடன், கணினி உருவாக்கும் Challan 'செலுத்துச்சீட்டின்' அச்சுப்பதிவுநகல் எடுத்து, இணையவழி விண்ணப்பம் சமர்ப்பித்த நாளிலிருந்து வங்கி மூலம் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி தேதிக்குள் இந்தியன் வங்கியின் ஏதேனுமொரு கிளையில் நாள் மற்றும் நேரம் முடிவதற்கு முன்பாக, இந்தியன் வங்கியால் நிர்ணயிக்கும் சேவைக் கட்டணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும். சம்பந்தப்பட்ட வங்கி கிளை 'செலுத்துச்சீட்டின்' வங்கி நகலை தக்கவைத்துக்கொண்டு, விண்ணப்பதாரருக்கு விண்ணப்பதாரர் நகலை திருப்பியளித்துவிடும். அந்த நகலை விண்ணப்பதாரர் கவனமுடன் பாதுகாக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியது பொறுத்து பிரச்சனை ஏதும் எழுமாயின் அவற்றை மேற்கோள் காண்பிக்க வேண்டும். |
| (b) | Failure to pay the fee prescribed within the time stipulated will result in outright rejection of application and no correspondence in this regard is entertained.<br>உரிய கட்டணத்தை வரையறுக்கப்பட்ட நேரத்திற்குள் செலுத்தாவிட்டால். விண்ணப்பம் நிராகரிக்கப்படும். |
| (c) | If the applicant claims exemption of examination fee and is later found to be not eligible for the same, his/her candidature will be rejected at any stage of selection.<br>விண்ணப்பதாரர் தேர்வுக் கட்டணத்திற்கு விலக்கு கோரியிருந்து. அதற்கு தகுதியற்றவரென பின்னர் கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தெரிவு செய்யும் எந்த நிலையிலும் நிராகரிக்கப்படும். |
| (d) | No other mode of payment of fee, like Demand Draft/Postal Order/Cheque/ NEFT/RTGS or any other mode of online payment will be entertained and those applications will be summarily rejected.<br>கேட்பு வரைவோலை/அஞ்சல் ஆணை/காசோலை/NEFT/RTGS போன்ற பிற முறையில் கட்டண செலுத்துதலோ அல்லது வேறுமுறையான இணையவழி செலுத்துதலோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது மற்றும் அவ்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். |
| (e) | Fees once paid, will not be refunded or adjusted towards any other recruitment under any circumstances.<br>ஒருமுறை செலுத்தப்பட்ட கட்டணம். எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்கப்படவோ அல்லது வேறு பணி தெரிவிற்கோ ஈடுகட்டபடமாட்டாது. |

8. **OTHER IMPORTANT INSTRUCTIONS (மற்ற பொதுவான அறிவுரைகள்):**

(a) Applicants cannot apply more than once for any post. If multiple applications are filed by the same applicant for a post, only the last application would be considered
ஒரு விண்ணப்பதாரர் எக்காரணத்திற்காகவும் ஒரு பதவிக்கு ஒரு முறைக்கு மேல் விண்ணப்பிக்க இயலாது. மேலும் விண்ணப்பதாரர் ஒரு பதவிக்கு பலமுறை விண்ணப்பித்திருந்தால் அவருடைய கடைசி விண்ணப்பம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**(b) The non –exempted candidates shall pay fee for each post.**
**விலக்கு அளிக்கப்படாத விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் கட்டணம் செலுத்த வேண்டும்.**

(c) The computer will not accept incomplete applications. Therefore, candidates are advised to exercise utmost caution while filling up the online application and submitting the same.
முழுமையாக நிரப்பப்படாத இணையதள விண்ணப்பங்கள் கணினியால் ஏற்றுக்கொள்ளப்படாது. ஆகையால் இணையதள விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கும்போது விண்ணப்பதாரர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**(d) The eligibility of the applicants would be assessed on the information furnished by them presuming the same to be true. If any applicant is found to have given false, wrong or incorrect information or suppressed vital information relating to age, qualification, etc., such applicant will not only be disqualified at any stage of the recruitment process or even after selection/ appointment, as the case may be, but would also be liable for criminal prosecution. Further, such applicants will be debarred from participating in any recruitment process for any post conducted by the Judicial Recruitment Cell, High Court, Madras.**
விண்ணப்பதாரர்களின் தகுதி அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் உண்மை என கருதி மதிப்பிடப்படும். விண்ணப்பதாரர் பொய், தவறான அல்லது சரியற்ற தகவல்களை வழங்கியதாக கண்டறியப்பட்டால் அல்லது வயது, தகுதி போன்ற முக்கிய தகவல்களை மறைத்திருந்தால், அத்தகைய விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு பணியில் எந்த நிலையிலும் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் அல்லது தேர்வு/நியமனத்திற்கு பிறகும் குற்றவியல் வழக்குகளுக்கு ஆளாவார்கள். மேலும், அத்தகைய விண்ணப்பதாரர்கள் சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு நடத்தும் எந்தவொரு ஆட்சேர்ப்பு பணிகளிலும் பங்கேற்க தடை செய்யப்படுவார்கள்.

(e) **All the educational and technical qualifications possessed by the applicants (including the educational qualifications for which he/she has appeared, but not passed/awaiting result/pursuing) as on the date of Notification shall be furnished in the online application. Non- furnishing of the particulars will be treated as suppression of facts. If such suppression is noticed, the candidature of such candidates will be rejected at any stage of the selection. If such suppression is noticed after appointment, their appointment will be cancelled and necessary criminal action will also be initiated, treating it as playing fraud on the recruiting agency. Therefore, the candidates are required to furnish all their educational and technical qualifications in the online application**.
விண்ணப்பதாரர்கள் அறிவிப்புத் தேதியின்படி பெற்ற அனைத்து கல்வி மற்றும் தொழில்நுட்ப தகுதிகள் (மற்ற கல்வி தகுதிக்கு தேர்வு எழுதி தேர்ச்சி பெறாவிடினும்/ முடிவுகள் எதிர்ப்பார்த்திருப்பினும்/படித்துக் கொண்டிருப்பினும்) உட்பட அனைத்தையும் இணையவழி விண்ணப்பத்தில் வழங்க வேண்டும். முழுமையான விவரங்களை அளிக்கவில்லை என்றால் உண்மையை மறைத்ததாக கருதப்படும். பொய்யான விவரங்கள் அளித்தது கண்டறியப்பட்டால், அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தேர்வின் எந்த கட்டத்திலும் நிராகரிக்கப்படும். நியமனத்திற்கு பிறகு பொய்யான விவரங்கள் அளிக்கப்பட்டது அறிய நேர்ந்தால், ஆட்சேர்ப்பு நிறுவனத்திற்கு இவ்வாறு பொய்யான விவரங்கள்

அளித்ததாக கருதி, அவர்களது நியமனம் ரத்து செய்யப்படும் மற்றும் தேவையான குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். எனவே விண்ணப்பதாரர்கள் தங்களின் கல்வி தகுதிகள் மற்றும் தொழில்நுட்ப தகுதிகள் பற்றிய முழு விவரங்களை இணையவழி விண்ணப்பத்தில் வழங்க வேண்டும்.

(f) The schedule of recruitment process may be subject to a change on account of any unforeseen event beyond the control of the Judicial Department and Judicial Recruitment Cell, High Court, Madras and such change will be notified in the Official website. No complaint/ Grievance from the candidates will be entertained or heard by the Judicial Department or Judicial Recruitment Cell, High Court, Madras in case of nonappearance of the candidates for the written examination and Certificate verification/Skill Test (only for the post of Driver) on the scheduled date and time on account of belated receipt of intimation regarding any change so notified.
நீதித்துறை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்புப் பிரிவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட எந்தவொரு எதிர்பாராத நிகழ்வின் காரணமாகவும் ஆட்சேர்ப்பு செயல்முறையின் அட்டவணை மாற்றத்திற்கு உட்பட்டது மற்றும் அத்தகைய மாற்றம் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அறிவிக்கப்படும். எழுத்துத் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு/ செய்முறைத் தேர்வு (ஓட்டுநர் பதவிக்கு மட்டும்) ஆகியவற்றிற்கான தேர்வர்கள், மாற்றி அறிவிக்கப்பட்ட தேதி மற்றும் நேரம் குறித்த தகவல் தங்களுக்கு தாமதமாக கிடைததால் ஆஜராகவில்லை என்ற புகாரும்/குறைகளும், நீதித்துறை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்புப் பிரிவு ஆகியவற்றால் ஏற்கப்படாது அல்லது கேட்கப்படாது.

(g) The name of candidate will be removed from the select / wait List without any notice, if it is found that any information furnished by him / her in the application form is false / incorrect /wrong.
விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரர் சமர்பித்த விவரங்களில் ஏதேனும் பொய் / சரியற்றது மற்றும் தவறானது என்று கண்டறியப்பட்டால், விண்ணப்பதாரர் பெயர் எந்த அறிவிப்பும் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட/ காத்திருப்பு பட்டியலில் இருந்து அகற்றப்படும்.

(h) If a candidate in the select list fails to join duty, within the period stated in the appointment order, his/her name will be removed from the selection list and no correspondence in this regard will be entertained.
தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் உள்ள ஒரு தேர்வர் நியமன ஆணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் பணியில் சேரத் தவறினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து அவருடைய பெயர் நீக்கப்படும். மேலும் இது தொடர்பாக எந்த கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(i) Eligibility of a candidate, who is to be called for Skill Test / Viva-voce / Certificate verification shall be finally decided after scrutiny and verification of documents/ testimonials produced. Therefore, mere requiring the candidate to appear for certificate verification, does not confer on him any right to be eligible for final selection.
செய்முறைத் தேர்வு / வாய்மொழித் தேர்வு / சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் தகுதி இறுதியாக அவர் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள்/ சான்றுகளின் ஆய்வு மற்றும் சரிபார்ப்புக்கு பிறகே முடிவு செய்யப்படும். எனவே, விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்புக்கு ஆஜராக அழைத்ததன் அடிப்படையிலே, அவர் இறுதித் தேர்வுக்குத் தகுதி பெற்றார் என்று எந்த உரிமையும் கோர முடியாது.

(j) Applicants are advised in their own interest to apply Online well in advance. Applicant shall ensure that they fulfill all requisite eligibility criteria on the date of notification before applying for the post. The educational/technical qualification/experience obtained subsequent to the date of notification will not be considered. Therefore, applicants who are awaiting the result of the required educational / technical qualification on the date of notification need not apply.
விண்ணப்பதாரர்கள் அவர்களது நலன் கருதி காலம் தாழ்த்தாமல் இணைய வழியில் முன்கூட்டியே விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். அறிவிக்கை தேதியன்று விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் பதவிக்கு அனைத்து வகையிலும் தகுதி பெற்றவரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அறிவிக்கை தேதிக்கு பின்னர் பெறப்படும் கல்வி / தொழில்நுட்ப கல்வி அனுபவம் ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. ஆகவே, அறிவிக்கை தேதியன்று இப்பதவிக்கு தேவைப்படும் குறைந்தபட்ச கல்வித்தகுதி /தொழில்நுட்ப கல்வி தகுதி பெறாமல் தேர்வு முடிவை எதிர்பார்த்து இருக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்.

(k) The Judicial Department/Judicial Recruitment Cell, High Court, Madras will not assume any responsibility for the applicants not being able to submit their Applications within the last date, for any reason.
எந்தவொரு காரணத்திற்காகவும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை கடைசி தேதிக்குள் சமர்ப்பிக்க முடியாமல் போனதற்கு நீதித்துறை / சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு எந்தவொரு பொறுப்பையும் ஏற்காது.

(l) ‘SMS’ alerts regarding the Written examination, Skill Test and Viva-voce, will be notified to the registered mobile number of the Applicants. Therefore the candidates are required to furnish correct mobile number and keep it active so as to receive the SMS alerts. The Judicial Department/Judicial Recruitment Cell, High Court, Madras, will not be responsible for any technical problems arising in this regard.
விண்ணப்பதாரரரகளின் பதிவு செய்யப்பட்ட கைப்பேசி எண்ணிற்கு எழுத்துத்தேர்வு, செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு குறித்த விவரம் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும். ஆகையால் தேர்வர்கள் சரியான கைப்பேசி எண்ணை வழங்கவேண்டும் மற்றும் குறுஞ்செய்தி விழிப்பூட்டல்களைப் பெற அதை செயலில் வைத்திருக்க வேண்டும. இது தொடர்பாக எழும் எந்தவொரு தொழில்நுட்ப சிக்கல்களுக்கும் சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு/ நீதித்துறை பொறுப்பாகாது.

(m) Applicants should take care to upload recent photograph of good quality in the application in the required size. If the applicants cannot be identified from the photograph uploaded by them, they will not be allowed to write the examination.
விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் நல்ல தரமுடைய அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்தை பதிவேற்றம் செய்யும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். விண்ணப்பதாரர்களால் பதிவேற்றம் செயயப்பட்ட புகைப்படத்திலிருந்து அவர்களை அடையாளம் கண்டறிய முடியவில்லை என்றால் அவர்கள் தேர்வு எழுதுவற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(n) Hall Tickets for Common Written examination, Skill Test and Viva-voce will not be sent by post. The candidates should download the Hall Tickets from the website https://www.mhc.tn.gov.in. The candidates only to whom the hall tickets have been issued

by the Judicial Recruitment Cell, High Court, Madras, will be allowed into the Examination hall/venue.

அனுமதி சீட்டு: எழுத்துத்தேர்வ, செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுக்கான அனுமதிசீட்டு அஞ்சல்மூலம் அனுப்பப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் (https://www.mhc.tn.gov.in) என்கிற இணையதள முகவரி மூலம் அனுமதிச்சீட்டை பதிவிறக்கம் செய்துகொள்ளுதல் வேண்டும். சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேரப்பு பிரிவு வழங்கிய அனுமதி சீட்டு வைத்திருக்கும் தேர்வர்கள் மட்டுமே தேர்வு எழுத தேர்வு அறைக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

(o) The admission of a candidate to participate in the recruitment process, at all stages, are purely provisional. The decision of the Judicial Recruitment Cell, High Court, Madras in respect of all matters pertaining to the Recruitment Process, as to the eligibility or otherwise of a candidate for admission to the Written / Common Written Examination, Skill Test and Viva-voce is final.

விண்ணப்பதாரரின் ஆட்சேர்ப்பு செயல்முறை தெரிவு அனைத்து நிலைகளிலும் தற்காலிகமானதாகும். மேலும், தெரிவு செய்தபிறகுகூட ஏதேனும் தவறு அல்லது விதிமீறல் காணப்பட்டால், எந்தநிலையிலும் விண்ணப்பதாரரின் தெரிவினை நிராகரிக்க சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவுக்கு உரிமை உள்ளது. எழுத்துத் தேர்வு, செய்முறைத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுக்கு அனுமதிக்கப்படும் தேர்வர்களின் தகுதிகளைப் பொறுத்து சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவு எடுக்கும் முடிவுகள் இறுதியானது.

(p) If any dispute or question arises relating to the disqualification / suitability of the candidates or interpretation of the Rules, the decision of the Judicial Recruitment Cell, High Court, Madras, in that regard is final.

விண்ணப்பதாரரின் தகுதி அல்லது தகுதியின்மை குறித்தோ, அல்லது விதிகளின் விளக்கங்கள் குறித்தோ எழும் பிரச்சனைகள் பொறுத்து, சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆடசேர்ப்பு பிரிவு எடுக்கும் முடிவே இறுதியானது.

(q) Any subsequent claim made, after the submission of online application, regarding any of the details submitted in the application, including educational & technical qualification will not be entertained. Evidence for all claims made in the online application should be uploaded/submitted, in time, whenever called for. If a candidate fails to produce the required documents within 72 hours of intimation, he / she shall not be entitled for any further extension of time and his/ her claim based on such document shall not be entertained.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பதிவேற்றம் செய்த பிறகு, அவர்களால் வழங்கப்பட்டுள்ள கல்வி / தொழில்நுட்ப தகவல்கள் தொடர்பாக எந்த கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் இவ்வறிக்கை தொடர்பான விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் தொடர்பாக, தங்களது சான்றாவணங்களையும், மற்ற அனைத்து உரிய சான்றாவணங்களையும் கோரும்பொழுது, அவற்றை பதிவேற்றம் செய்தல்/சமர்ப்பித்தல் வேண்டும். தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரிய 72 மணி நேரத்திற்குள் விண்ணப்பதாரர்கள் அவற்றை சமர்ப்பிக்க தவறினால், அவர்கள் அதைச் சமர்ப்பிப்பதற்கான கால நீட்டிப்புக்கு தகுதியுடையவர் அல்ல, மேலும் அத்தகைய ஆவணங்களின் அடிப்படையில், அவர்கள கோரும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(r) The vacancies will be filled up as per the judgment of the Hon'ble Supreme Court of India in State of Tamil Nadu Vs. K.Shobana and others reported in (2021) 4 SCC 686.
தமிழ்நாடு மாநில அரசு எதிர் K.ஷோபனா மற்றும் பலர (2021) 4 எஸ்.சி.சி. 686 என்ற வழக்கின் உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி காலிபணியிடங்கள் நிரப்பப்படும்.

(s) The number of vacancies advertised for the posts are only approximate and are liable for increase or decrease with reference to vacancy position at any time before finalisation of selection. Whenever the vacancies are revised, the number of candidates selected to the successive stages would also be revised commensurately, in accordance with the ratio originally notified for the recruitment. Increase in vacancies in the later stages of the recruitment would not in any case entail the consideration of candidates unsuccessful in the previous stages.
அறிவிக்கப்பட்டுள்ள காலிபணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும், இறுதி தெரிவு முடியும் வரை காலிப் பணியிடங்களின் நிலையைப் பொறுத்து எந்த நேரத்திலும் அதிகரிக்கவோ அல்லது குறையவோ செய்யும். காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை திருத்தப்படும்பொழுது அடுத்தடுத்த நிலைக்கு தேர்ந்தெடுக்கப்படும் தேர்வர்களின் எண்ணிக்கையும், ஆட்சேர்ப்புக்கு முதலில் அறிவிக்கப்பட்ட விகிதத்திற்கு ஏற்ப திருத்தப்படும். ஆட்சேர்ப்பின் அடுத்த நிலைகளில் காலிப்பணியிடங்களின் அதிகரிப்பு எந்தவொரு சந்தர்பத்திலும் முந்தைய நிலைகளில் தோல்வியுற்ற தேர்வர்களை கருத்தில் கொள்ள முடியாது.

(t) The Candidate shall furnish correct and true information regarding:
விண்ணப்பதாரர்கள் கீழ்கண்டவற்றிக்கு சரியான மற்றும் உண்மையான தகவல்களை சமர்பிக்க வேண்டும்.

(i) arrest, facing criminal proceedings, charges, convictions, details such as named or described but name not specifically mentioned in FIR, Accused in private complaints, dropped from charges /proceedings or quashed by any Court of law, discharged from criminal proceedings. In case any criminal case is filed/disciplinary action is taken against or any conviction / punishment is imposed on any person after the production of 'No Objection Certificate', or in any case, from the time of submission of the online application format up to the finaliztion of the recruitment process and appointment, such applicants should report this fact forthwith to the Judicial Recruitment Cell, High Court, Madras, by mentioning their Application Number / Registration Number and the name of the post applied for and the name of the Judicial District wherein he/she has applied for. Any violation or failure to comply with this instruction will result in rejection of candidature of the candidate at any stage of selection, even after recruitment besides debarring them from appearing for the recruitments notified by the Judicial Recruitment Cell, High Court, Madras.
ஏதேனும் முதல் தகவல் அறிவிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டு குற்றவாளி என காண்பிக்கப்பட்ட அல்லது பெயர் குறிப்பிடப்படாமல், ஆனால் விவரங்கள் குறிப்பிடப்பட்டு விண்ணப்பதாரை குறிக்கும் வகையில் அமைந்திருத்தல், கைது நடவடிக்கை, குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொள்வது, குற்றச்சாட்டுகள், தண்டனைகள், தனியார் புகார்களில் குற்றஞ்சாட்டப்பட்டவர், ஏதேனும் நீதிமன்றத்தால் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்தல் அல்லது ரத்து செய்தல், குற்றவியல் நடவடிக்கையிலிருந்து விடுவித்தல். விண்ணப்பதாரர் தன்னுடைய விண்ணப்பத்தை சமர்பித்த பின்னர் அவருக்கெதிராக ஏதேனும் குற்றவியல்

வழக்கு பதியப்பட்டால்/ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அல்லது ஏதேனும் தண்டனைகள் வழங்கப்பட்டால் உடனடியாக சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவுக்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்கும் பொழுது விண்ணப்ப எண்/பதிவு எண், விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் மற்றும் நீதித்துறை மாவட்டத்தை குறிப்பிட வேண்டும். இல்லையெனில், அவர்களது விண்ணப்பம் எந்த நேரத்திலும், நிலையிலும் நிராகரிக்கப்படும், அதன்பிறகு நீதித்துறையின் ஆட்சேர்ப்பு பிரிவு நடத்தும் எவ்வித தேர்விலும் அவர் பங்கேற்க தடை செய்யப்படுவார்.

(ii) The details with regard to debarment / disqualification by any recruiting agency, criminal or any disciplinary proceedings initiated / contemplated, pending or finalised, participation in agitation or affiliated to any Political Organisation.
ஏதேனும் பணிநியமன முகமையால் தடைசெய்யப்படுதல்/தகுதிநீக்கம் செய்யப்படுதல், தொடங்கப்பட்ட/வகுக்கப்பட்ட, நிலுவையில் உள்ள அல்லது முடிவுசெய்யப்பட்ட குற்றவியல் அல்லது ஏதேனும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள், ஆர்பாட்டம் அல்லது அரசியல் கட்சியில் பங்கெடுத்தல்.

(iii) Information relating to his/her Candidature in election for Parliament / State Legislature / Local Bodies /Trade Union etc.
பாராளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி மன்றங்கள், தொழில் சங்கம் ஆகிய தேர்தல்களில் வேட்பாளராக இருந்திருந்தால் அதன் விவரங்கள்.

(iv) The details such as originals of the judgment, order/ or G.O. dropping further action in departmental proceedings or any document that may prove the suitability of such applicants for a Government appointment in such cases must be produced at the stage/ time of certificate verification without fail.
துறைரீதியான நடவடிக்கைகளை கைவிட்டதற்கான தீர்ப்பு, ஆணை/அரசு ஆணை ஆகியவற்றின் அசல் அல்லது அத்தகைய நேர்வுகளில் அரசு பணி நியமனத்திற்காக அத்தகைய விண்ணப்பதாரர்களின் தகுதியை மெய்பிக்கும் ஆவணம் ஏதும், சான்றிதழ் சரிபார்க்கும் நிலையில்/நேரத்தில் தவறாமல் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(u) All information that relates to the suitability of the applicants for the appointment, which arises after the submission of application and till the date of his /her selection and appointment, shall be reported to the Judicial Recruitment Cell, High Court, Madras, in writing then and there.
விண்ணப்பிக்கும் பணிக்கு பொருந்தக்கூடிய அனைத்து விவரங்களும் விண்ணப்பததை சமர்ப்பித்த பின்னர், தெரிவு நிலை மற்றும் பணிநியமனம் வரையில் எப்பொழுதேனும் பெற்றிடின், சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவிற்கு எழுத்து மூலமாக உடனடியாக தெரியப்படுத்த வேண்டும்.

(v) Incomplete applications and applications containing wrong claims or incorrect particulars relating to category of reservation / eligibility / age / communal categories / educational and technical qualifications / physical disability will be liable for rejection at any stage of selection process,without any intimation to the candidates. The candidate will also be debarred from appearing for all future examinations and selections conducted by the Judicial Recruitment Cell, High Court, Madras. If the suppression or false claim is noted subsequently, the selection of the candidate concerned will be declared invalid.
நிறைவு செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் இடஒதுக்கீடு பிரிவு/தகுதி/வயது/

வகுப்பு இனம்/கல்வி/தொழிற்கல்வி தகுதிகள்/ உடல் இயலாமை குறித்து தவறான தகவல்கள் கொடுத்துள்ள விண்ணப்பங்கள் தேர்வு நிலையில் எந்த நிலையிலும் விண்ணப்பதாரருக்கு எந்த முன்தகவலும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பதாரர், எதிர்காலத்தில் சென்னை உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளிலும், தெரிவுகளிலும் கலந்து கொள்வதிலிருந்து தடை செய்யப்படுவார். பொய்யான தகவல் அளித்தது அல்லது மறைத்தது பின்னர் தெரியவந்தால், சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரின் தெரிவு செல்லாததாக அறிவிக்கப்படும்.

(w) Whenever called for, the applicants shall submit their original documents, in proof of their educational, technical qualifications, work experience, etc.
கல்வித்தகுதி, தொழில்நுட்ப கல்வித் தகுதி, முன்அனுபவம் ஆகியவற்றை நிரூபிக்கும் பொருட்டு உண்மை நகல்களை கோரும்போது விண்ணப்பதாரர்கள் சமர்பிக்க வேண்டும்.

(x) If no suitable or qualified women candidates are available for selection against the vacancies reserved for them, those vacancies shall be filled by other male eligible candidates belonging to the respective communal categories.
பெண்களுக்கான இடஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடங்களில் உரிய அல்லது தகுதியுடைய பெண் விண்ணப்பதாரர்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை என்றால், அநத காலிப்பணியிடங்களுக்கு அதே வகுப்பைச் சார்ந்த தகுதியுடைய ஆண் விண்ணப்பதாரர்களால் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

(y) Whenever vacancies are reserved for Arunthathiyars on preferential basis, even after filling up of the vacancies reserved for SC (Arunthathiyars), if more number of qualified Arunthathiyars are available, they shall be entitled to compete for the seats reserved for scheduled castes candidates and if any posts reserved for Arunthathiyars remain unfilled for want of adequate numbers of qualified candidates, it will be filled up by other scheduled castes candidates.
முன்னுரிமை அடிப்படையில் ஆதிதிராவிடர்(அருந்ததியர்)க்காக ஒதுக்கப்பட்ட பணியிடங்கள் நிரப்பப்பட்ட பிறகும்கூட, அதிக எண்ணிக்கையிலான தகுதிவாய்ந்த அருந்ததியர்கள் இருந்தால், அவர்கள் அருந்ததியர் அல்லாத ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களுக்கும் போட்டியிடலாம். அவ்வாறே, போதுமான எண்ணிக்கையிலான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் அருந்ததியருக்காக ஒதுக்கப்பட்ட பதவிகள் ஏதேனும் நிரப்பப்படாமல் இருப்பின் அது அருந்ததியரல்லாத ஆதிதிராவிடர் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

(z) Persons who are in the service of the Indian Union or a State in India or in the employment of Local Bodies or Universities or Quasi Government Organizations or Public Sector Units constituted under the authority of the Government of India or of a State in India, whether in regular service or in temporary service need not send their applications through their Head of Department or employer. Instead, they may directly apply after duly informing their employer in writing that they are applying for the particular recruitment, subject to the condition that they should produce '**No Objection Certificate'** in the form prescribed in **Annexure - B**, subsequent to this notification, and from an authority not below the level of the Head of Department or Office and shall produce the same whenever called for. Failure to produce the certificate will lead to rejection of candidature at any stage of selection.

**Note:-** Persons who get employment after the submission of their applications and before the receipt of intimation admitting them for certificate Verification requiring to produce original documents for verification should also produce the 'No Objection Certificate'.
இந்திய அரசு அல்லது மாநில அரசுப் பணியிலுள்ள தகுதிகாண் பருவத்தினர்/ தகுதிகாண் பருவம் நிறைவடையாத/தற்காலிக பணியாளர்களாக/ நிரந்தர பணியாளர்களாக உள்ள விண்ணப்பதாரர்கள், இந்த அறிவிக்கைக்கு பின் தேதியில் தங்களது அலுவலர் அல்லது துறைதலைவரிடமிருந்து பின்னிணைப்பு ஆ-வில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் தடையின்மைச் சான்றிதழை பெற்று, அதனை உயர்நீதிமன்றம் கோரும் காலத்தில் சமர்பிக்க வேண்டும். அவ்வாறு சான்றிதழை வழங்கத் தவறிய விண்ணப்பதாரர் எந்த நிலையிலும் தெரிவுநிலைக்கு நிராகரிக்கப்படுவர்.

குறிப்பு:

இப்பணிக்கு விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும்போது அரசு பணியில் இல்லாமலிருந்து, பிறகு மற்றொரு அரசுப் பணியில் சேர்ந்திருப்பின், அத்துறைத் தலைவரிடமிருந்து தடையில்லா சான்றிதழை பெற்று சான்றிதழ் சரிபாாப்பின் போது சமர்பிக்க வேண்டும்.

(aa) Requests for furnishing causes of failure to attend Written / Common Written Examination, Skill Test, Viva-voce or reasons for non-selection based on such results will not be entertained. Likewise, requests for exemption from age limit or other qualifications also will receive no attention.
பொது எழுத்துத் தேர்வில்/ செய்முறைத் தேர்வில் / வாய்மொழித் தேர்வில் கலந்து கொள்ளாததற்கு அல்லது தேர்ச்சி அடையாததற்காக பெறப்படும் கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது. அதேபோல் வயது வரம்பு அல்லது பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோரியும் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

(ab) Any communication to the Judicial Recruitment Cell should be sent only by the applicants by specifically mentioning their Application ID/Registration Number. Communications in the name of a Pleader or Agent on behalf of the applicant, will receive no attention.
விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்ப எண்/பதிவு எண் குறிப்பிட்டு வரும் முறையீடுகளை மட்டுமே நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவுக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் சார்பாக வழக்குரைஞர் அல்லது பிரதிநிதி பெயர்களில் வரும் முறையீடுகள் கவனிக்கப்படமாட்டாது.

## 9. INSTRUCTIONS TO PHYSICALLY CHALLENGED CANDIDATES: (மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்):

(a) Physically challenged candidates who are unable to use their hands for writing, alone are allowed to avail the services of the scribes. They can bring their own scribe or request the Judicial Recruitment Cell, High Court, Madras to provide scribe for the written examination, provided they make a specific request in their online application in this regard. Requests for scribes made after the submission of application or on the date of examination will receive no attention. The candidates who opt for scribe assistance should upload the certificate in the form specified in **Annexure-I** regarding physical limitation, duly obtained from the competent authority as specified in G.O.(Ms) No. 08, Welfare of Differently Abled Persons (DAP-3.2) Dept. dated 21.09.2021.

எழுத இயலாத மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள், தங்கள் சொந்த பதிலி எழுத்தரை அழைத்து வர அனுமதிக்கப்படுவார்கள் அல்லது சென்னை

உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவு பதிலி எழுத்தரை நியமிக்க கோரும் பட்சத்தில் பதிலி எழுத்தர் நியமிக்கப்படுவர். இதுதொடர்பாக தாங்கள் இணையதள விண்ணப்பத்தில் ஒரு கோரிக்கையை வேண்டினால், எழுத்துத் தேர்விற்கு ஒரு பதிலி எழுத்தரை உதவிக்கு அனுமதிககப்படுவர். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தேர்வு நாளன்று பதில் எழுத்தர் வேண்டும் என கோருவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மாற்றுத்திறனாளிகள் நல (டிஏப்பி 3.2) துறையின், 21.09.2021ஆம் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.08ல் குறிப்பிட்டுள்ளபடி, பதிலி எழுத்தர் உதவியை தேர்வு செய்யும் விண்ணப்பதாரர்கள், இணைப்பு-I படிவத்தில் தகுதிவாய்ந்த மருத்துவ அதிகாரியிடமிருந்து பெற்ற உடற்தகுதி சான்றிதழினை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(b) Additional time of twenty Minutes (20 minutes) per hour is allowed to candidates with benchmark disability and also for the candidates who are availing the service of the scribes to complete the Written Examination.
மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் மற்றும் பதிலி எழுத்தரை பயன்படுத்திக்கொள்ளும் மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு, எழுத்துத் தேர்வை முடிக்க ஒரு மணிநேரத்திற்கு இருபது நிமிடஙகள் (20 நிமிடங்கள்) என கூடுதல் நேரம் வழங்கப்படும்.

(c) The Physically challenged candidates, availing of the services of the scribes while appearing for the written examination will be seated in a separate room under the direct supervision of the Chief Invigilator.

பதிலி எழுத்தரை பயன்படுத்திக்கொள்ளும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய அனைத்து மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களும் தலைமை கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்களா.

(d) The Physically challenged candidates who are willing to write Common Written examination in General English for the posts of 1. (i) Examiner, (ii) Reader (iii) Senior Bailiff, (iv) Junior Bailiff/Process Server (v) Process Writer, (vi) Xerox Operator, 2. Driver, 3.(i)Copyist Attender and (ii) Office Assistant should submit their request in the online application.General English or General Tamil examination will be conducted only as per the choice of the candidates. No change in the language will be entertained on the date of the examination.

1. (i)நகல் பரிசோதகர், (ii)நகல் வாசிப்பாளர், (iii)முதுநிலை கட்டளை நிறைவேற்றுனர், (iv)இளநிலை கட்டளை நிறைவேற்றுனர்/ கட்டளை பணியாளர், (v)கட்டளை எழுத்தர், (vi)ஒளிப்பட நகல் எடுப்பவர, 2. ஓட்டுநர், 3. (i) நகல் பிரிவு உதவியாளர் மற்றும் (ii) அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு பொது எழுத்துத் தேர்வை பொது ஆங்கிலத்தில் எழுத விரும்பும் விண்ணப்பதாரர்கள் தங்கள் கோரிக்கையை இணையதள விண்ணப்பத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பொது ஆங்கிலம் அல்லது பொதுத் தமிழ் தேர்வு, விண்ணப்பதாரர்களின் விருப்பப்படி மட்டுமே நடத்தப்படும். தேர்வு நடைபெறும் நாளில் மொழியில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது.

10. **<u>GENERAL INSTRUCTIONS TO CANDIDATES WHILE ATTENDING WRITTEN EXAMINATION:(எழுத்துத் தேர்வு எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான அறிவுரைகள்):</u>**

